# கல்வி வளர் சிந்தனைகள்




கச்சாயூர்ப் பண்டிதர், இளைப்பாறிய அதிபர்

## கவிஞர் சுகசீலன்

22/10/2002

# கல்வி வளர் சிந்தனைகள்

## பாகம் - I



கச்சாயூர்ப் பண்டிதர், இளைப்பாறிய அதிபர்.

**கவிஞர் சுக~சீவரத்தினம்**

கச்சாய்த் தமிழ் இலக்கியமன்ற வெளியீடு
சித்திரை - 2002

| | | |
|---|---|---|
| தலைப்பு | :- | கல்வி வளர் சிந்தனைகள் |
| முதற்பதிப்பு | :- | 07. 04. 2002 |
| பதிப்புரிமை | :- | ஆசியருக்கே |
| பிரதிகள் | :- | 500 |
| விலை | :- | ரூபா 125/= |
| வெளியீடு | :- | கச்சாய்த் தமிழ் இலக்கிய மன்றம் |
| அச்சுப்பதிவு | :- | A.R.S. பிரின்டேர்ஸ் - சாவகச்சேரி |

Kalvi Valar Chinthanaigal
BY
Pandit S.K. Seevartnam (Retd. Principal)
Copyright
Published by
Kachchai Tamil Illakkiya Mantram.



# சமர்ப்பணம்



தாயகத் தாரணி சங்கட வாழ்வதால்
வாய்ப்போ வளமோ வருவது வரட்டுமென்று
நாடுகள் பற்பல ஆயினும் **இங்கிலண்ட்**
ஊடகம் அத்தொடு. ஓங்கும் வளம்பல
பெற்றது என்பதால் பேசுவர் பெரிதாய்
உற்றனர் அங்கெம் உறவினர் மாணவர்
நண்பர்கள் மற்றும் அயலவர் இன்னுமெம்
மண்ணகம் ஈழத்து எவரே யாயினும்
யாவர்க்கும் இந்நூல் சமர்ப்பண மாகுக.
ஆவலில் ஊக்கம் உதவியோர்க் கெல்லாம்
ஆரா அன்பில் அகம்நிறை நன்றிகள்
பேரா தரவு தொடர்க பெயர்த்துமே
வாழ்வியல் எல்லாம் வளமெலாம் பெற்றுநீர்
வாழ்க நெடுநாள் மகிழ்ந்து.

நூலாசிரியர்
கச்சாய்த் தமிழ் இலக்கிய மன்றம்

## சிந்தனைகளுக்குள் நுழையுமுன்..................

**கல்வி வளர்ச் சிந்தனைகள்** என்னும் இந்நூலை யான் 1992ல் பாடசாலை அதிபர் ஆகக் கடமையாற்றிக் கொண்டிருந்த வேளையில், என் உள்ளத்தில் முகிழ்ந்த அருமருந்தான கல்விச் சிந்தனைகள் பலவற்றையும், தொடர்ந்து என்னுடைய பத்து ஆண்டுகளுக்கு மேலாக்ச் செய்த ஆசிரியப் பணியையும், சுமார் இருபது ஆண்டுகளாக அதிபர் பதவியில் அடியேன், நாளை உலகின் நாடாளும் மன்னர்களாம் - சூழும் எமது பள்ளி மாணவர்களின் தனித்தனித் திறமைகளைக் கண்டுபிடித்து சக ஆசிரியர்கள் பல்லோருடனுமிணைந்து சேவை ஆற்றவைத்த இறை அருளை இந்நூலில் **என்னுரை** யை எழுதும் இச்சந்தர்ப்பத்தில் மனதார எண்ணி வியக்கின்றேன்.

"பெற்ற தாயும், பிறந்த பொன்னாடும் நற்றவ வானிலும் நனி சிறந்தனவே" என்ற மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் இலட்சிய தாகத்தினை மனதிற் கொண்டு, 1973ல் யான்,1966-1967 காலப்பகுதியில் யாழ்/ கொழும்புத்துறை ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் பயிற்சியை முடித்தபின், நுவரேலியா மாவட்டத்தில் ஐந்து ஆண்டுகள் சேவை ஆற்றிய பின் யாழ் மாவட்டத்துக்கு இடமாற்றம் பெற்ற வேளையில் ஆரம்பக்கல்வியை எனக்குப் பெற்றுத்தந்த யாழ்/ கச்சாய் அ.த.க. பாடசாலையை என் கல்வித் தொடர் சேவைக்காகத் தெரிந்தேன். என்னுடைய பண்டிதத் தமிழ்ப் புலமை காரணமாக 1973, 1974 ஆகிய இரண்டு ஆண்டுகளுக்குள் யாழ்/ சாவகச்சேரி டிறிபேக் கல்லூரிக்கும், யாழ்/சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்கும் இடமாற்றம் கல்வித்திணைக்களம் தந்த வேளையில், எங்கள் ஊர் மாணவச் செல்வங்கள் தம் எதிர்கால வாழ்வில் பயன்பெற வேண்டுமே என்பதற்காகவும் "யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்"(என் சொந்த ஊர்) என்ற உயர்கோட்பாட்டுக்கு அமைய மேற்படி இரண்டு இடமாற்றங்களையும் இரத்துச் செய்வித்தேன்.

15.01.1975ல் அதிபர் பரீட்சையில் சித்திபெற்று அதிபர் தரம் V இல்(பின்னால் அதிபர் தரம் III) வவுனியாக் கல்வி மாவட்டத்திற்கு சேவையாற்றச் சென்றேன்.

முதலில் வ/கல்நாட்டின குளம், பின் வ/காத்தாற் சின்னக்குளம் பாடசாலைகளிலும், 19.08.1979 முதல் வ/வவுனியா மகாவித்தியாலயத்தில் கனிஷ்ட அதிபராகவும் 31.12.1981 வரை கடமை ஆற்றினேன். இக்காலத்தில் கல்லூரி இந்து மாமன்றத் தலைவராக இருந்து கொண்டு, மும்மூன்று நாட்கள் கொண்ட நவராத்திரிக் கால விழாக்களை மூன்று ஆண்டுகளும் பொறுப்பேற்று, நிகழ்ச்சிகள் அனைத்தையும் செவ்வனே நாடாத்த அருள் ஈய்ந்த திருவருட் சக்திகளைக் குறிப்பாக நாவின் திருத்தெய்வம் நாமகளின் கருணைக்கு இச்சந்தர்ப்பத்தில் தல்லைசாய்க்கின்றேன்.

பின்னர் 01.01.1982 இல் யாழ் மாவட்டத்துக்கு இடமாற்றம் பெற்றவேளையில் பொறுப்பான ஒரு அதிபராகச் சிறிய, அதாவது 1-5 பாடசாலைக்குப் போய்க் கடமை ஆற்ற வாய்ப்பு இருந்தும், நான் படித்த பாடசாலை - எங்கள் ஊர்ப் பாடசாலை என்ற மன உந்தலால் உப அதிபராக யாழ்/கச்சாய் அ. த. க. பாடசாலைக்கே மீண்டும் என்சேவையை அர்ப்பணித்தேன். இப் பாடசாலையின் தொடர் சேவையில், பாடசாலையின் பெற்றார் ஆசிரிய சங்கப் பொருளாளர் பொறுப்பெடுத்துப் பல சிரமதான வேலைகளுடன், வித்தியாலய முன்பக்க மதில் வேலைகளையும் ஆரம்பித்து வைத்தேன்.

1982 முதல் 1986 வரை உப அதிபராக இருந்து முன்னெடுத்த சேவைகள் பற்பல. 1985 இன் நடுப்பகுதியில் அதிபர் திரு.கா.கோவிந்தபிள்ளை அவர்கள், அகவை அறுபதில் இளைப்பாற, அதிபர் கதிரைக்குப் போக வாய்ப்பிருந்தும், பாடசாலை ஆங்கில ஆசிரியர் தேவைகருதி திரு.வீ.பஞ்சாட்சரம் அவர்களை அதிபராக்க ஆவன செய்தேன். நான்கு ஆண்டு வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டிகளில் முழுநேர மேற்பார்வையாளராகவும், 1985 நவராத்திரிக் கலைவிழா, 1986ல் பாடசாலை வரலாறு காணாத மிகச் சிறந்த பரிசளிப்பு விழா ஆகிய இரு நிகழ்விலும் பாரிய பொறுப்பாளனாகவும் கடமை ஆற்றக்கிடைத்த உச்சச் சேவை மனப்பான்மையை எண்ணி மேலும் வியக்கின்றேன்.

சுமார் முப்பது ஆண்டுகள் - நீண்ட கால என் கல்விச் சேவையிலும், என் உடன்பிறந்த இரட்டையரான திரு. சு. க. நவரத்தினம் (ஓய்வு பெற்ற ஆசிரியர்) அவர்களாற்றிய கல்விச் சேவையிலும் நாம்கண்ட பல நூற்றுக்கணக்கான ஆசிரிய ஆசிரியைச் சமூகத்தினரையும் - நமக்கெல்லாம் வழி காட்டிய அதிபர், உப அதிபர்கள், கல்விப்பகுதி மேலதிகாரிகள், பலலட்சக் கணக்கான என் இனிய மாணவச் செல்வங்கள், அவர்தம் பெற்றோர்கள், அனைவர்தும் பல்வேறு தோற்றங்களையும், பற்பல குணாதிசயங்களையும் என் மனக்கண் காண்கின்றது.

இல்லறம் என்னும் நல்லற வாழ்க்கைக்கு ஏற்ற வாய்த்த வளத்துணைவியாக என்னைக் கரம் பற்றி 30.11.2001 முப்பத்தாறாம் (36வது) திருமண நிறைவு நாளைக் கண்ட "கணவனுக்கு மனைவியார் சிறந்த அமைச்சராக இருக்க வேண்டும்" என்னுங் கோட்பாட்டுக்கு அமைய எனக்கு உற்றதோர் உறுதுணையாகவும் உள்ள திருமதி சந்திரகாந்தி சீவரத்தினம் அவர்களுடைய வாழ்க்கையில் அன்னாருடைய நாற்பது ஆண்டுகளுக்கு மேலான தொடர் கல்விச் சேவையை எண்ணி இறும்பூதி எய்தி மகிழ்கின்றேன். இச் சந்தர்ப்பத்தில் என் இனிய பாராட்டுக்கள். "நாம் இருவர் நமக்கு இருவர்" என்பதற்கு அமைய இறையருளால் நாம் பெற்ற பிள்ளைச் செல்வங்களான முதல்வன் **பிராகாஷ்** (அவுஸ்ரேலியாவில் மாணவன்) இளவல் **பிரணவன்** (இலண்டனில் மாணவன்) இருவரதும் இனிய தோற்றங்கள், செயற்பாடுகள், அவர்தம் சிந்தனைகள் யாவற்றையும் இவ்வேளை என் மனக்கண் காண்கிறது.

இன்னும் என் பண்டித வகுப்பு ஆசான்கள் காலஞ்சென்ற நீர்வேலிப் பண்டிதர் சி. துரைசிங்கம் அவர்கள், பண்டிதை திருமதி சத்தியதேவி துரைசிங்கம் ஆகியோரை ஆண்டுகள் பல கழித்து இன்றைய என் உயர்நிலையில் நன்றியுடன் எண்ணிப் பார்த்து உளம் பூரிக்கின்றேன். முன்னவர் எனக்கு ஈந்த எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி குறிப்பாக செய்யுள் இலக்கண அறிவுக்கும், பின்னவர் தந்திட்ட சைவத் தமிழ் அறிவுக்கும் நிகரேதும் இல்லையென்பது வெள்ளிடைமலை.

என் கவிதை, கட்டுரைகள் இன்னோரன்ன ஆக்கங்களை வெளிப்படுத்த அருள்தருகின்ற "நாவின் திருத்தெய்வம் நாமகள்" அன்னை சரஸ்வதி - மன்னும் கலைவாணியின் பேரருளுக்கும் தலை சாய்க்கின்றேன்

இந்நூல் **"கல்விவளர் சிந்தனைகள்"** பகுதி I ஆகும். IIம் பகுதியில் வரவிருக்கும் சிந்தனைகளுக்குள் நுழையுமுன்.......... பகுதியில் இந்த என்னுரை (நூலாசிரியர் உரை) தொடரும். இதில் **ஏன் பிறந்தேன்?** என்ற பாரிய சிறப்புச்சிந்தனை ஒன்றும் இடம் பெறும். அத்தோடு, "கல்வி வளர் சிந்தனைகள்", என்னும் இந்தச் சிறப்பு நூலை ஏன் எழுதத் தொடங்கினேன்? என்பதன் விளக்கமும் தரப்படும். அறிவுசார் சமூகத்தோர்களுக்கும் இந்நூல் வெளிவர பல்வாற்றாலும் உதவிய தொடர்புடையோர் யாபேர்க்கும் அன்பு நன்றிகள்.

**துன்ப முறவரினும் செய்க துணிவாற்றி**
**இன்பம்பயக்கும் வினை**

*- ஐயன் வள்ளுவன்*

**எண்ணிய முடிதல் வேண்டும்**
**திண்ணிய நெஞ்சம் வேண்டும்**

*- மகாகவி பாரதியார்*

**"சுகசீவன்"**

## வெளியீட்டுரை

"கல்வி வளர் சிந்தனைகள்" என்னும் இந்தச் சிறப்பு நூலை எழுதித்தந்து, எங்கள் கச்சாய்த் தமிழ் இலக்கிய மன்றம் அதனை வெளியிட்டு வைக்க வைத்த, எங்கும் நிறைந்து எல்லாமாய் ஆய இறையருளுக்குச் சிரம் தாழ்த்தி நூலாசிரியர், ஓய்வு பெற்ற முன்னாட் பாடசாலை அதிபர் திரு. சு.க.சீவரத்தினம் (கச்சாயூர்ப் பண்டிதர், கவிஞர் சுகசீவன்) அவர்களை, மிகப் பெரிதும் உளமாரப் பாராட்டுகின்றோம். கல்வி உலகு சார்ந்த அங்கத்தவர் எவரும் இந்நூலை வாசித்துப் பயனடைவார்கள் என்பது எம்மன்றத்து முழு நம்பிக்கை.

"கல்வி வளர் சிந்தனைகள்" என்ற நூல் இப்பொழுது நமது பிரதேசத்துக் கல்வியாளர் கரங்களில் தவழுகின்றது. பல்லாண்டுகளாக அடக்கு முறைகளுக்கும் அவற்றால் ஏற்பட்ட ஒடுக்கு முறைகளுக்கும், இடம்பெயர்வுகளுக்கும் உட்பட்ட ஆசிரியர்களும் மாணவர்களும் மற்றயவர்களும் நெஞ்சில் இருத்த வேண்டிய பல கருத்துக்களை இந்நூலில் "சுகசீவன்" தந்துள்ளார். அவை இன்றைய சமுதாயத்துக்குப் புத்துயிரையும் நம்பிக்கையையம் ஏற்படுத்தும் என்பதில் சந்தேகமில்லை,

**அருளாசி உரை**யை எழுதி வழங்கிய தென்னிந்திய திருச்சபைப் பேராயர் வண ஜெபநேசன் அடிகளார் அவர்களுக்கும் எடுப்புரை வழங்கிய இளைப்பாறிய ஆசிரியர் ச. வே. பஞ்சாட்சரம், மற்றும் **வாழ்த்துரை** வழங்கிய முன்னாட் கொத்தணி அதிபர், கலைச்செல்வி ஆசிரியர், "சிற்பி" திரு.சி. சிவசரவணபவன் அவர்கட்கும் அணிந்துரைகளை எழுதித்தந்த யாழ். பல்கலைக்கழக வணிகத்துறைத் தலைவர் (பொன்விழா நாயகர்) திரு. க. தேவராஜன் அவர்கட்கும் தென்மராட்சி கல்விவலய நிர்வாகப் பொறுப்பாளரான உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. இலங்கையார் கணேசன் அவர்கட்கும் எங்கள் மேலான அன்பு நன்றிகள்.

நூலாசிரியர் அவர்கட்கும், இந்நூல் வெளிவரப் பல்லாற்றானும் உதவியோர் யாபேர்க்கும் குறிப்பாகக் கொடிகாமம் ப. நோ. கூ. சங்கம் சார்ந்தோர், ஏனையவர்க்கும், நூலாசிரியரின் உடன்பிறப்பு சு.க.நவரத்தினம் (ஓய்வுபெற்ற ஆசிரியர்) அவர்கட்கும் சாவகச்சேரி A.R.S அச்சகத்தார்க்கும் நன்றிகள்! நன்றிகள்!! நன்றிகள்!!! தெரிவித்து நிறைவு செய்கின்றோம்.

சி. பாலசுப்பிரமணியம்
செயலாளர்

சி. கணேசலிங்கம்
தலைவர்

# பதிப்புரை

ஏறக்குறைய கால்நூற்றாண்டு காலமாக எம்முடன் நெருங்கிய தொடர்பு கொண்ட நெஞ்சில் வஞ்சனை சிறிதும் அற்ற நல்லாசான், நல்லறிஞர், கவிஞர் இவற்றுக்கும் மேலாக நண்பரான பண்டிதர் . "சுகசீவன்" அவர்களின் பல்வேறுபட்ட நூல்களை அச்சுருவாக்கும் உரிமை பெற்ற எமது ஸ்தாபனம் இந்த அறிவுலகை விழிப்புறவைக்கும் "கல்வி வளர் சிந்தனைகள்" நூலுக்கு பதிப்புரை வழங்குவதில் பெருமையடைகிறது. இந்நூலின் இணைப்பான அனுபந்தத்தில் காணப்படும் ஆக்கங்கள் இந்நூலுக்கு மேலும் மெருகூட்டுகின்றது.

புதுக்கவிதை, வசனகவிதை என்ற வடிவங்களில் தமிழ் இலக்கண மரபுகள் மருவி வரும் இன்றைய காலகட்டத்தில் இலக்கண மரபு மாறாத பாடல்களைப் பாடுவதில் வல்லவர்கள் ஒரு சிலரே உள். இவர்கள் மத்தியில் இலக்கண வழி தவறாத பல்வேறுபட்ட பாடல்களை பாடி உதவுவதோடு மட்டுமல்லாது துணிந்து அவற்றை வெளியிட்டு மற்றவர்கள் பயன் பெற வேண்டும் என்ற பெருநோக்குள்ள தனிமனிதனாக கவிஞர் சுகசீவனை நாம் காண்கின்றோம்.

இதைவிடவும் மேலாக பண்டிதர் அவர்களின் சிறுது கால மவுன விரதம் கலைந்ததின் ஒருமித்த ஆற்றல் வெளிப்பாடாகவும் உலகசாதனை புத்தகத்தில் இடம் பெறும் வகையிலான செயற்பாடாக தன் பல்வேறு ஆக்கங்கள் கொண்ட பல்வேறு வகையான 5 புத்தகங்களை அச்சிட்டு ஒரே நாளில் வெளியிட்டு வைத்த சுகசீவன் அவர்களின் திறமைக்கு ஒரே பதிப்பகமாக எமது ஸ்தாபனம் இயங்கியமை எம்மை பெருமையடைய செய்கின்றது.

கவிஞர் சுகசீவன் போன்ற ஆற்றல் மிக்க கவிஞர்களின் ஆக்கங்களை வாங்கி பயன் பெற்று அவர்களுக்கு ஊக்கம் தரவேண்டிய பாரிய பொறுப்பு தமிழ் பேசும் நல்லுலகிற்கு உண்டு என்பதனை இச்சமயத்தில் வலியுறுத்துவதோடு அவர்தம் நூல்களை வெளியிட முன் வந்த கச்சாய் தமிழ் இலக்கிய மன்றிற்கு எமது பாராட்டை வழங்கி நிற்கின்றோம்.

**பதிப்பாசிரியர்**

## தென் இந்திய திருச்சபை, யாழ் அத்தியட்சாதீனம்

# ஆசியுரை

கச்சாயூர் பண்டிதர், பாடசாலை அதிபர், கவிஞர், தத்துவஞானி திரு. சுக-சீவரத்தினம் எழுதிய "கல்வி வளர் சிந்தனைகள்" என்ற நூல் கிடைக்கப் பெற்றோம். "பிரான்சிஸ் பேக்கன்" என்ற அறிஞன் எழுத்து ஒருவனை சரிநுட்பம் உள்ளவனாக. ஆக்குகின்றது என்று குறிப்பிட்டுள்ளார்.

(WRITING MAKETH AN EXACT MAN)

பண்டிதர் சுக-சீவரத்தினம் அவர்கள் பல கவிதைகளையும், கட்டுரைகளையும் எழுதியுள்ளார். இதனாலே அவருடைய எழுத்துக்களில் சரிநுட்பத்தைக் காணுகின்றோம். எதனையும் மிகவும் தெளிவாகவும் சரிநுட்பமாகவும் கூறும் ஆற்றல் பெற்றவர்.

"கல்வி வளர் சிந்தனைகள்"என்ற நூல் இப்பொழுது நமது பிரதேசத்துக் கல்வியாளர் கரங்களில் தவழுகின்றது. பல்லாண்டுகளாக அடக்குமுறைக்கும்,இடப்பெயர்வுக்கும் உட்பட்ட ஆசிரியர்களும் மாணவர்களும் நெஞ்சில் இருத்த வேண்டிய பல கருத்துக்களை தந்துள்ளார்.அவை இன்றைய சமுதாயத்திற்கு புத்துயிரையும் நம்பிக்கையையும் ஏற்படுத்தும் என்பதில் சந்தேகமில்லை.

நமது நாட்டுக்கு வேண்டிய ஆலோசனைகளும், ஆறுதல் மொழிகளும் நமது மண்ணில் இருந்தே எழவேண்டியன. அந்த வகையில் கச்சாயூர்க் கவிஞர் வார்த்தைகள் நம் நாட்டவர்க்கு ஔடதமாக அமைகின்றது.

யாழ்ப்பாணம் ஒரு காலத்தில் பண்டிதர்கள் நிறைந்த பூமியாக காணப்பட்டது. எமது பிரதேசத்தின் தூய தமிழுக்கு வாயூறி நின்றது தென்னிந்தியா. இன்று பண்டிதர் மரபு நமது பிரதேசத்தில் குன்றி வருவது வேதனைக்குரிய விடயமாகும். பண்டிதர் சுக-சீவரத்தினம் போன்றவர்களை காப்பாற்றுவதும் உற்சாகம் அளிப்பதும் சமுதாயத்தின் கடமையாகும். அவரின் நற்பணி தொடர இறைவன் சகல சௌபாக்கியங்களையும் அருள்வாராக.

கலாநிதி, பேரறிஞர்,
பேராயர் **எஸ். ஜெயநேசன்**
தென்னிந்திய திருச்சபை
யாழ் திருமண்டலம்

# எடுப்புரை

விழித்திருக்கும் வேளையெலாம்
விதம்விதமாய்ச் சிந்தனைகள்
கொழித்திருக்கும் எவர்க்குந்தான்!
குறள்,கூழை அதிகம்அவை!
மானிடவர் சிந்தனைக்குள்
மாண்புமிகுஞ் சிந்தனையும்
தானிடையில் பூப்பதுண்டு!
தக்கஅந்தச் சிந்தனைகள்
மிகச்சிலரால் இனங்கண்டு
விளக்கமுறக் கவிதைகளில்
தகைத்தகதை, நாடகத்தில்
தரப்படும்இவ் வுலகினுக்கு!
அத்தகைய பணியொன்றே
அன்புநண்பன் **சுகசீவன்**
வித்தகமாய் இன்றிங்கே
**"கல்விவளர் சிந்தனைகள்"**
எனும்தலைப்பில் பிரசுரிக்கும்
எழில்நூலும்! அனுபவத்தில்
கனிந்தவற்றைத் தருகின்றார்
கவி,உரையாய்!! வாழ்கபணி!!!

முன்னாள் தலைவர் கவிஞர்
இணுவில் கலைஇலக்கியக் கழகம், **பண்டிதர். ச. வே. பஞ்சாட்சரம்.**
இணுவில். (இளைப்பாறிய ஆசிரியர்)

# வாழ்த்துரை

கச்சாயூர் பண்டிதரும் "சுகசீவன்" என்னும் முத்தான புனைபெயரில் கவிதையுலகை ஆரோகணித்து வருபவரும் ஆகிய முன்னை நாட் பாடசாலை அதிபர் சு. க. சீவரத்தினம் அவர்களைப் பல்லாண்டுகளாக நான் நன்கு அறிவேன். கடைசியாக 1992ல் கச்சாய்த் தமிழ் இலக்கிய மன்ற வெளியீடுகளான அவரின் இருகவிதை நூல்களை அவை பாலர்பாமலர் பன்னிரண்டு [12]. பத்துக்கவிதைகள் என்பனவற்றைத் தந்து ஒரு நூலுக்கு ஆய்வுரை ஒன்றை எழுதித்தரும்படி கேட்டிருந்தார். அக்காலம் முதல் இக்காலம் வரை கடந்த ஒன்பது ஆண்டுகளின் பின் என்னை அவர் வந்து சந்தித்த வேளை, சிறுவர்களுக்கும் பெரியவர்களுக்கும் ஏற்ற ஐந்து நூல்கள் வர இருப்பதாகக் கூறியதும் மிகுந்த ஆச்சரியப்பட்டேன். அவர் குறிப்பிட்டுச் சொன்னவை:-

1. பாலர் பாமலர் நாற்பது [40]
2. "சுகசீவன் கவிதைகள்"
3. கல்வி வளர் சிந்தனைகள் [பாகம் I]
4. "அறிவுக் கதம்ப மாலை"
5. "அரங்கில் ஓர் ஆறு"

என்பனவாகும்.

"இடப்பெயர்வால் எம்மவர்க்கு ஏற்படும் அவலங்கள்" என்ற தலைப்பில் அவர் எழுதிய மேற்படி இரண்டாவது கவிதைப் பனுவலாகிய "சுகசீவன் கவிதை" யில் வரும் அவரின் கவிதையும் "விதிக்கப்பட்டிருக்கும் விசச் சூழல்" 26.08.2001 "சுடரொளி" வார இதழில் வெளிவந்த கவிதையும் "இங்கிருந்து நோக்குகின்றேன் இந்து அன்னையை என்பாடு" ஆகிய மூன்றுமே இவர்தம் யதார்த்தக் கவிதைப் புலமைக்குச் சிறந்த சான்றாக அமைகின்றது என்றால் அது வெறும் பேச்சல்ல.

"கல்வி வளர் சிந்தனைகள்" என்ற நூலின் பல சிந்தனைகளை நான் வாசித்த பொழுது அவரின் தத்துவஞான மேலறிவை எண்ணி வியந்தேன்.

"பண்டொருநாள் பல்வளஞ்சேர் தேசம் கிரேக்கத்தில்
தத்துவ ஞானி தலையாய சோக்கிரட்டீஸ்
புத்தி புகட்டிப் புவியாரை வாழ்விக்க
என்னை? செயினும்நீ ஏன்?எதற்காய்? எப்படியென்(று)
உன்னையே கேட்டுவந் தாற்றென்றான் நற்கருமம்"

என்று ஈறாகப் பாடி அதிஈறாக

"இன்ன வகையில் இவன்தந்த பல்லறிவும்
இன்னும் இவைபோன்ற வண்ண அறிவுரைகள்
வையத் தமிழரெலாம் வாழ்வு மகிழ்ந்துபெற
மெய்யாக நெஞ்சில் மிகக்கொண்டு மேதினியில்
செந்தமிழைக் காத்துமிகு சிந்தைநிறை யக்காண்போம்
சுந்தரஞ்சேர் அன்புச் சுகம்"

என்ற அவரின் "அரங்கில் ஓர் ஆறு" நூலில் "அறிவுரைகள்" என்ற தலைப்பைக் கொண்டு ஒரு கவியரங்கில் அவர் எழுதிப் பாடிய கவிதை வரிகளைக் கண்ட பொழுது, இவரின் கல்வி வளர் சிந்தனைகளின் மிளிர் கருத்துக்களை ஆய்ந்து பெருமகிழ்வடைந்தேன். தத்துவஞானி தலையாய சோக்கிரட்டீஸ் புத்துயிர் பெற்று எழுந்து வந்து என் அருகில் நிற்கும் பிரேமையும் எனக்கு உண்டாயிற்று.

தென்னிந்திய திருச்சபைப் பேராயர் சுகசீவனின் "கல்வி வளர் சிந்தனைகள்", நூலுக்கு வழங்கிய அருளாசி உரையில், "எழுத்து ஒருவனை சரி நுட்பம் உள்ளவனாக ஆக்குகின்றது [Writing Maketh An Exact Man] பண்டிதா் சு.க.சீவரத்தினம் அவா்களின் எழுத்துக்களில் சரிநுட்பத்தைக் காணகின்றோம். எதனையும் மிகவும் தெளிவாகவும், சரிநுட்பமாகவும் கூறும் ஆற்றல் பெற்றவா். பல்லாண்டுகளாக அடக்கு முறைக்கும் இடப்பெயா்வுக்கும் உட்பட்ட ஆசிரியா்களும் மாணவா்களும் நெஞ்சில் இருத்த வேண்டிய பல கருத்துக்களை இந்நூலில் தந்துள்ளாா்" எனக் குறிப்பிட்டு உள்ளாா்.

இதைவிட மேலும் சிறப்பாக இந்த வாழ்த்துரையின் தொடரை எழுதவேண்டிய தேவையின்மை கருதி இத்துடன் நிறைவு செய்யும் முன் அன்பர் சுகசீவனின் ஆக்கங்கள் ஐந்துமே மிகச்சிறப்பான படைப்பு இலக்கியங்கள் என்பதை ஆணித்தரமாக அடித்துக் கூறி எதிர்வரும் 30.11.2001 அருள்மிகு கார்த்திகை விளக்கீட்டு நன் நாளில் அருள்மிகு கச்சாய்க் கண்ணகை அம்மன் கோவிலில் நிகழவுள்ள மாபெரும் நூல் வெளியீட்டு விழா இனிது நிறைவேற இறைவன் தாளிணைகள் வேண்டி, அவர் தம் படைப்பு இலக்கியப் பணி தொடரவும், வாழ்க்கை வளம் பெறவும் வாழத்துகின்றேன்.

**சி.சிவசரவணபவன், B.A**
**"சிற்பி"**
(இளைப்பாறிய கொத்தணி அதிபர்)

# அணிந்துரை

கல்வி காலத்தால் அழியாது. கல்வி, கல்வி, கல்வி, காலமெல்லாம் கல்வி. கல்வி கற்ற பெரியோரைக் காலமெல்லாம் மதிப்போமே; என்றும் மேலும் "வீசுப்புகழ்சேர் மன்னவர்கள், மேலாம் கல்வியாளருடன் பேசின் பெரியோர் கல்வியினர்" என்றெல்லாம் கச்சாயூர்ப் பண்டிதர், கவிஞர் "சுகசீவன்" பல நூற்றுக்கணக்கான பாக்களை இயற்றிக் கொண்டு இருக்கும் ஒரேவேளை அதேவேளை [At the same time and at the nick of the time] "கல்வி வளர் சிந்தனைகள்" என்னும் இன்றைய காலத்தின் தேவைக்கு உரிய அருமருந்தன்ன ஒரு பனுவலை நூலாக்கி அந்நூலின் பல பாகங்களின் முதன்மையான பகுதி I என்பதை வெளியிடுகின்றார்.

கச்சாய்தமிழ் இலக்கிய மன்றம் அவரின் ஐந்து நூல்களை ஒரே நேரத்தில் வெளியிட்டு அவ்வைந்து நூல்களின் வெளியீட்டு விழாவையும் அருள்மிகு கார்த்திகை விளக்கீட்டு நன்நாளில், அருள்மிகு கச்சாய்க் கண்ணகை அம்மன் ஆலய முன் மண்டபத்தில் இனிய மாபெரும் நூல் வெளியீட்டு விழாவாக வைக்க உள்ளமை அறிந்து, தமிழ் இலக்கிய உலகில் "சுகசீவன்" அவர்கள் ஒரு தனியிடத்தை, எம் ஈழநாட்டில் மட்டுமன்றி தமிழ் கூறும் நல்லுலகம் முழுவதும், ஏன்? அகில உலகத்திலும் இல்லாத ஒரு அருஞ்சாதனையை அவர் ஈட்டுவார் என்ற ஒரு பாரிய உள்ளம் மகிழ் உணர்வை யான் எட்ட நேர்ந்தது.

இன்றைய இடப்பெயர்வு, மக்கள் படும்பாடுகள், துன்பங்கள், துயரங்கள் மத்தியிலும், "கல்விவளர் சிந்தனைகள்" என்ற நூலை வெளியிடும் ஆசிரியர் கவிஞர் "சுகசீவன்" அவர்களின் சிந்தனைகள் நாளைய உலகிற்கும் அருமருந்தன்ன பொக்கிசமாகும் என்பது என் சிந்தனைக்கு தெட்டத் தெளிவாகத் தெரிகின்றது.

"மற்றவர்க்கு நோவின்றி வாழ்வோம் என்ற மனத் திண்மை உடையோர் தம் செயற்பாடுகளைக் கண்டு இன்புறுவது கற்றறிந்தோர்களுடன்" என்ற ஒரு சிந்தனையே மேலுயர்வாகும் என்பதை வெளிப்படுத்தி நூலாசிரியர் வாழ்வும் வளமும் சிறக்க இறையருள் வேண்டி நிறைவு செய்கின்றேன்.

**க. தேவராஜன்**
யாழ். பல்கலைக்கழக வணிகத்துறைத் தலைவர்.

# அணிந்துரை

பண்டிதர் சு.க.சீவரத்தினம், எனது அன்புக்கும் பெருமதிப்புக்கும் உரியவர். அவர் பலநூறு கவிதைகளை எழுதியுள்ளார், தற்போது எழுதியும் வருகின்றார். அவற்றுள் பல, பத்திரிகைகளில் வெளிவந்து பலரது பாராட்டுக்களையும் பெற்றுள்ளன. இவற்றை , கவிதை, நூல்களாகவும் வெளியிட்டு வருகின்றார்.

இவர்தம் கவிதைகளில் - "பூநாறும் எங்கள் புதுவையூர் கச்சாய்", "கொடிகாமம் பேரூர்", "இங்கிருந்து இந்து அன்னையை நோக்குகின்றேன்", "இடப்பெயர்வால் எம்மவர்க்கு ஏற்படுகின்ற அவலங்கள்", "விதிக்கப்பட்டிருக்கும் விஷச் சூழல்" - போன்றவை பிரதேசத்தின் மீது கவிஞருக்குரிய பற்றையும், சமூகப் பிரதிக்ஞையையும் புலப்படுத்துகின்றன. மேலும் சமகால அறிஞர்கள், கல்விமான்கள் பற்றிய இவரது கவிதைகள், கற்றோரைப் போற்றும் இவர்தம் தூய பண்பினை எடுத்துக் காட்டுகின்றன.

பண்டிதர் சு.க.சீவரத்தினம் தமது ஆசிரியப் பணியை ஆழ்ந்த புலமையுடன், கடமையுணர்வுடன், மாணவச் செல்வங்களை மேம்படுத்தும் வகையில் கடமையாற்றியவர் என்பதனை நான், உறுதியாகக் கூறிவைக்க விரும்புகின்றேன். அவரது ஆசிரியத்துவப் பணியின் அனுபவ வெளிப்பாடாகவே அவரது "கல்வி வளர் சிந்தனைகள்" என்னும் நூல் வெளிவருகின்றது. இந்நூல் இன்று கல்வி உலகில் கடமையாற்றும் ஆசிரியர்கள், அதிபர்கள், மற்றும் கல்விசார் உத்தியோகத்தர்கள் யாவரும் வாசித்துப் பயன் பெறவேண்டிய நூலாகும். குறிப்பாக இந்நூல் கல்விச் சமூகத்தின் சிந்தனையைக் கிளறிவிடும் வகையில், மேலும் மேலும் சிந்திக்க வைக்கும் வகையில் அமைந்துள்ளது.

இறுதியாக, எனது அன்புக்குரிய ஆசிரியப் பெருந்தகை பண்டிதர் சு.க.சீவரத்தினம் பல ஆண்டுகள் "சுக சீவனாக" வாழ்ந்து, எமது சிந்தனைக்கு விருந்தளிக்க வேண்டும்! தமிழ்த்தாயின் மலரடிக்குப் பல கவிதைகள் படைக்க வேண்டும்!! என வாழ்த்தி!!! அவர் பணி எவ்வித விக்கினமும் இன்றித் தொடர விநாயகப் பெருமான் அருள் வேண்டி அமைகின்றேன்.

**இலங்கையர் கணேசன்**
பிரதிக்கல்விப்பணிப்பாளர்
தென்மராட்சிக் கல்வி வலயம்
சாவகச்சேரி.

# கல்வி வளர் சிந்தனைகள்

## முதலாவது சிந்தனை:- எழுந்த காலம் 1992

மற்றவர்க்கு நோவின்றி வாழ்வோம் என்ற மனத் திண்மை உடையோர்தம் செயற்பாடுகளைக் கண்டு, இன்புறுவது கற்றறிந்தோர் கடன். இத்தகைய உயர்ந்த திண்மை உடையோர், பேசினாலும், ஏசினாலும் அவர்களின் தொடர்புடையோர் சிற்றறிவும், சிக்கல் தரும் பொறாமையும் தீர்த்து அதாவது அவர்கள் தமது பலவீனங்களைத் தாமே உணர உரிய கால இடைவெளி கொடுத்து, திருந்துவார்கள் எனவும் அல்லது கொள்கைகளை மாற்றுவார்கள் எனவும் விரும்புகின்ற கற்றறிந்தோர் உள்ளங்களை இவர்கள் உணரும் காலம் எந்நாளோ?

## கற்றறிந்தோர் கருதுபவை........................

"கல்வி வளர் சிந்தனைகள்" என ஆசிரியர் தொகுத்துள்ள பல்வேறு சிந்தனைகளை நாங்கள் பார்க்க இனிய பாக்கியம் பெற்றோம். அவர்தம் சிந்தனைகளில் மேன்மையானதும், பெரும்பொருள் பொதிந்ததுமான மேற்குறிப்பிட்ட சிந்தனையைக் கிடைத்த அரிய சந்தர்ப்பங்களில் அலசி, அலசி ஆராய்ந்த அளவில் இது சிந்தனையா? அல்லது ஆரம்ப காலத் தத்துவ ஞானிகள் குறிப்பாக சோக்கிரட்டீஸ் பிளேட்டோ தொடர்ந்து அரிஸ்டோட்டல் ஆகிய பெரும் முன்னாள் நாகரிகம் படைத்த கிரேக்க நாட்டுத் தத்துவ ஞானிகள் அடித்து அடித்துச் சொல்லுகின்ற வாழ்வியல் மக்கட் சமுதாயத்தினரை வளப்படுத்தும் தலையாய கருத்துக்களோ? என்று எண்ணத் தோன்றுகின்றது.

"தமிழ் கூறும் நல்நூலகம்" என்னும் உயர் தமிழ்த் தொடரைத் தந்த பண்டைத் தமிழ் இலக்கிய இலக்கண ஆசிரியருக்கு இந்த அரிய சந்தர்ப்பத்தில் நன்றி தெரிவித்து, அருமருந்தன்ன இந்தத் தத்துவ ஞானக் கருத்தினை உடைய

குறித்த கல்வி வளர் சிந்தனையைத் தமிழ் கூறும் நல்லுலகம் ஏற்றுக்கொள்ளுமென நம்புகிறோம்.

சமகாலத் தமிழர்தம் வாழ்வியலோடு பின்னிப் பிணைந்துள்ள அடக்குமுறை, ஒடுக்குமுறை, இருட்டடிப்பு என்பவற்றிலிருந்து தொடர்புடைய ஒவ்வொருவரும், அவர்கள் பாடசாலை அதிபர்களோ, கொத்தணி அதிபர்களோ, அவர்தம் உயர் அதிகாரிகளோ இன்னும் உயர் உயர் அதிகாரிகளோ....... என்ற வரிசையில் தொடர்புடையவர்கள் ஒவ்வொருவரும் சந்தர்ப்ப சூழ்நிலையால், அவசியமானதும் அவசரமானதுமான பொருளாதார இடைஞ்சல்கள் அல்லது வேறு ஏதேனும் காரணங்களால் நல்லியல்பிற் திரிந்திருந்தால்,அவர்கள் மனம்,வாக்கு,காயத்தால் தீங்கின்றி அதாவது தூயமனம், தூய சொல், தூயசெயல் என்பவற்றை பேணிக்காக்க வேண்டும் என்றும் அதனால் மேற்குறிப்பிட்ட அடக்குமுறை போன்றவை அறவே நீங்கி, தனித்தனித் திறமையுள்ள மாணவர்கள் உச்சத் திறமையைக் கண்டுபிடித்து, வளப்படுத்தும் ஆசிரியர்களையும் அதற்கு நல்ல வகையில் நெறிப்படுத்தும் நல்லதிபர்களையும் மறவாது சிந்தித்துப் பாராட்டும் மனப்பான்மையில் இந்நூல் ஆசிரியர் அவர்களின் இந்த உயாந்த தத்துவ ஞானச் சிந்தனை விளங்குகிறது.

'தொடர்புடையோர்' என்று எழுவாய் எடுத்துக் கல்வி வளர் சிந்தனை ஆசிரியர் இங்கே குறிப்பிடுவது, ஓர் இல்லத் தலைவனுக்கு அவனுடைய மனைவி மக்களும், ஒரு அதிபருக்கு அவருடைய உடனாசிரியர்களும், கொத்தணி அதிபர்களுக்கு அதிபர்களும், கோட்டக் கல்வி அதிகாரிகளுக்கு கொத்தணி அதிபர்களும், கல்விப் பணிப்பாளருக்கு கோட்ட அதிகாரிகளும், கல்வி அமைச்சருக்குக் கல்விப் பணிப்பாளரும் என்ற அளவில் செல்லும். இந்த இடத்தில்.

"தம்முயிர்க்கு உறுதி எண்ணார் தலைமகன் வெகுண்ட போதும் வெம்மையைத் தாங்கி நீதி விடாது நின்று உரைக்கும் வீரா" என்று கவிச்சக்கரவர்த்தி கம்பர் காட்டுகின்ற அமைச்சர்களைப்போல ஆசிரியர்கள் அதிபர் முன்னும் அதிபர்கள் கொத்தணி அதிபர்கள் முன்னும் என்ற தொடர்பில் செயற்பட வேண்டும் என்பதை ஆசிரியர் விளக்குகின்றார் போலும்.

இத்தகைய சிறப்பு வாய்ந்த தத்துவக் கருத்தினை விரித்து விளக்கப் பல பக்கங்கள் எழுதவேண்டும். விரிவஞ்சி அதனை விடுக்கின்றோம். இதனை எழுதித் தந்த ஆசிரியர் கச்சாயூர்ப் பண்டிதர், பாடசாலை அதிபர், கவிஞர், கட்டுரையாளன், தத்துவஞான உணர்வுடையோன் ஆகிய திரு. சுக.சீவரத்தினம் அவர்கள் பல்லாண்டு வாழ்ந்து குறிப்பிட்ட துறைகளில் பல்வேறு படைப்புக்களைத் தந்து தமிழர்தம் சமகாலத் தேவைக்குச் சமர்ப்பிக்க வேண்டுமென்று விழைக்கின்றோம்!

## இரண்டாவது சிந்தனை:-

தடி இடித்தாலும், முள்ளுக் குத்தினாலும், வேறு வெட்டுக் காயங்கள் ஏற்பட்டாலும், ஏன்? ஹெலி வந்து 50 கலிபரால் அல்லது 90 கலிபரால் தாக்கினாலும், ஏறிகணை வந்து விழுந்தாலும் மேலும் பொம்பர்கள் வந்து குண்டுகளைப் பொழிந்தாலும் ஏற்படுங் காயங்கள் கூட உரிய கால இடைவெளியில் மாறிவிடலாம். எனினும், வெஞ்சொற்களாலும் வேதனை தரும் வாக்கியங்களாலும் ஏற்படுகின்ற மனம் நொந்த காயங்கள் அவ்வாறு மாறுவதில்லை இதனை,

"தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினாற் சுட்ட வடு"

என வள்ளுவர் காட்டுகின்றார். இத்தகைய மனம் நொந்த காயங்களைக் கூட மாற்றுகின்ற - ஆறறிவு படைத்த மனிதஜீவராசிகளுள், விரல் விட்டு எண்ணக் கூடிய ஒரு சிலர் அதாவது நூறாயிரம் பேருக்கு ஒருவர் இருக்கலாம். அவர் தத்துவ ஞானியா? அல்லது ஞானியா?

இச்சிந்தனை 1992 காலப்பகுதியில் பிறந்ததாயினும் இக்காலம் 2001 இறுதிவரை பொருத்தமுடைத்தே. கிபிர், மிக், சுப்பர்சொனிக், பல்குழல் என்பன மக்கள் சமுதாயத்தை அழிக்கும் தன்மை உடையவையாக இன்று விளங்குவது வேதனைகள்! வேதனைகள்!! வேதனைகள்!!! இந்நிலைமாற அரசும் அரசியற் கட்சிகளும், அடிவருடிகளும் தாம்பெற்ற கல்வியை சிந்தித்துச் செயற்படின் சாந்தி, சாமாதானம் எல்லாமே காணலாம்.

## மூன்றாவது சிந்தனை:-

"வெள்ளை உளம் பேண விருப்பமாய் ஒருசமயக்
கொள்கையிலே நிற்றல் குறிப்பாக வேண்டுமப்பா"

இச்சிந்தனையும் கூட, மானிடவியல் வாழ்வு வளம் பெற அத்தியா அவசியமானதுவே. சமயங்கள் பலவெனினும் அடிப்படைப்பலன் அல்லது அடையும் பாதை நிறைவு ஒன்றே. ஒரு பெரிய மலையின் கிழக்கு, தெற்கு, மேற்கு, வடக்கு ஆகிய எத்திசையில் சென்றாலும் ஒரு மலை ஏறும் சாதனையாளனோ அல்லது பக்தி மிக்க அடியவனோ அம்மலை உச்சியை அடையலாம். ஆனால் எந்த ஒரு சமயமும் சாராதவன் ஒருவனை "நாஸ்திகன்" என்று அழைப்பது உண்டு. சமயம் சார்பவன் ஆஸ்திகன்!

**வாழ்கவே!**

செந்தமிழும் ஆஸ்திகமும் சீரசேர் தமிழ்க்குலமும்
எந்தப் பொழுதும் இனது.

இன்னும் -

சைவம் நல்ல சமயம்
சார்ந்த புத்தர் யேசு
முகம்மது நபியுங் கூட
முந்து சமயம் வாழும்

என்ற பாலர் பாமலர் நாற்பது 40 நூலில் இடம் பெறும் பாலர் கவிதையும் இங்கு நோக்கற் தக்கது.

## நாலாவது சிந்தனை:-

"கல்விநிலை யங்கள் கடமைதனைச் சீர்செய்தால்
நல்லியல்பு வாழ்வமை யும்".

இச்சிந்தனையை - "இன்றைய இடப்பெயர்வுத் தொல்லைகள், அரசு மற்றும் சமூக பொருளாதாரத் தொல்லைகளால் எப்படி கடமைதனைச் சீர்செய்யலாம்" என்று பல்லாயிரக்கணக்கான ஆசிரியர்கள் குரல்களும், நூற்றுக்கணக்கான அதிபர்கள் குரல்களும் சங்கொலியாகக் காதில் விழுகின்றமையை உணர்கின்றேன். ஆனால் மாணவச்

செல்வங்கள், இளையவர் வாய்புதைத்தும், சிரேஸ்ட மாணவர்கள் முணுமுணுப்பதும், பெற்றோர்கள் பெட்டிசம் கூட எழுத எண்ணுவதும் என் நினைவு அலைகளில் சேர்கின்றது. கூடியவரை அல்லது இயன்ற வரை (To The Very Extreame) தொடர்புடையோர் ஆவன செய்தல் அவசியம். தேவையுங் கூட. (Pleare do the very best)

**நல்லியல்பு**. என்பதன் விளக்கம் கற்றறிந்தோர் நன்கு உணர்வர். அதனைக் கடைப்பிடித்து, எதிர்கால நாடாளும் மன்னவராம் எம்மினிய மாணவர்க்கு வளஞ்செய்க.

நன்றி

## ஐந்தாவது சிந்தனை:- பரிசம் [ஊறு]

**பரிசம்** என்பது ஐம்புலன்களாகிய சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்ற வரிசையில் ஊறு என்பதைக் குறிக்கும்.

**ஊறு** என்பது பரிசம் தான்
உணர்வர் மனிதர் பறவைவிலங்
கெல்லாம் என்பதை யார்மறுப்பார்
என்றும் **பரிசம்** உதவுமன்றோ!
பரிசம் தன்னை உணராத மானிடர்கள் எவரேயாயினும்
அன்னவரைப் 'பாவியர்', என்று கூடக்
கூறிடலாம் - சொல்லிடலாம்.
பிறந்த குழந்தைகள் **பாலர்** நிலையைக் கடக்கும் வரை
அவர்கள் தரும் **பரிசம்** எம்மவர்க்குப் **பாசத்தை**

ஊட்டிநிற்கும். எனவே பரிசம் பகுத்தறிவுள்ள மானிடர்க்கு என்றென்றுந் தேவையன்றோ! ஏன்? ஐந்தறிவுள்ள பறவை விலங்குகள் கூடப் **பரிசத்தால் பாசம்** பேணுவதை எங்கள் கண்கள் ஊடாகக் காண்கின்றோம். வீட்டில் நாம் வளர்க்கும் அன்பாதரவுப் பிராணிகளான ஆடு, மாடு, பூனை, நாய் மட்டுமன்றிக் கிளி, மைனா, காதற் பறவைகள் (Love Birds) எல்லாம் பரிச உணர்வால் வெளிப்படுத்தும் பாசத்தினை நாள்தோறும் நாம் காண்கின்றோம். கழிவுப் பொருள்களை

மிதித்தவுடன் பரிச உணர்வைக் காலால் உணர்கின்றோம். உடனே "கூச்சம்" உணர்கின்றோம். எம்தம் கல்வி வளர் உணர்வால் உடனடியாகக் கழுவித் துப்புரவு செய்ய ஐம்பூதங்களுள் ஒன்றாகிய நீரை - தண்ணீரைத் தேடுகின்றோம். உடம்பின் பகுதி எல்லாமே உணர்த்துவது **பரிசம்** தான். ஆகையினால் தான் ஐந்து புலன்களிலே **உயர்வு பரிசத்துக்கே** உண்டு.

## ஆறாவது சிந்தனை:-

"மானிட வியல் வாழ்வு வளஞ்சிறக்கப்
பாடுகளைச் சுமந்தே ஆக வேண்டும்
இதுபண்டை நல்வரலாறு படிப்பிக்கும் பாடம்."

இச்சிந்தனையைக் கல்வி உலகத்தோர் மிகவும் உன்னிப்பாக - இன்று எம்தமிழர் இடம்பெயர்வாலும், அரசினதும் மற்றையோரதும் அடக்குமுறை, ஒடுக்குமுறை, இருட்டடிப்பு ஆகிய அவல நிலையில்(ம்) எண்ணிப் பார்க்க வேண்டும். சொந்தவூர் சென்று மக்கள் எல்லாம் அவர்தம் உடைமைகளைப் பார்க்கப் போவதாயின் எத்தனை ராணுவக் காவல் நிலையங்களுக்குப் பதில் கூற வேண்டும். அதுவும் இளைஞர், யுவதிகள் என்றால் மேலும் பற்பல சோதனைகள். இயற்கையின் சீற்றங்கள், புயற்காற்று, பேய்மழை, வெள்ளம் பாயும் பாதைகள் இவற்றுக்கு ஊடாகப் பயணம். துவிச்சக்கர வண்டியில் கூட மூவர், மோட்டார் சைக்கிளில் சிலசமயம் உருப்படி ஐவர். இப்படிப் பாடுகள் சுமக்கும் நாட்கள் என்று கழியும். "என்று தணியும் இந்தச் சுதந்திர தாகம்" எனப்பாடிய பாரதிப் பெரும் புலவனார் கவிதை வரிகளை எண்ணுகின்றேன். இதன் எழுச்சித்தாகமே என்னுடைய இரண்டாவது பெருங்கவிதை நூலில் நான் யாத்த - **இடப்பெயர்வால் எம்மவர்க்கு ஏற்படும் அவலங்கள்**. என்ற 18 வது கவிதையாகும்.

"படிப்பும் போச்சு பசிக்கும் வயிறுகள்
உடுபுட வையுங்கூ டச்சீராய் இல்லையே!
எடுத்த பயணங்கள் எல்லாமே ஓட்டம்
அடுத்து நடப்பதுஎன்ன! அறியோம் நாம்
இங்கிருந்து நோக்குகின்றோம் எங்கள் ஊர் என்பாடு"

என்று தொடர்ந்து வரும் பல கவிதை வரிகள். இப்பொழுது வாசக நேயர்கள் பாடுகள் சுமப்பது பற்றி நன்கு அறிந்து கொண்டீர்கள் அல்லவா?

## ஏழாவது சிந்தனை:-

நித்திரையில் இருப்பவர்கள் நித்தமும் தான்எழுவர்
நித்திரை போல்நடிப் போரும் எழவேண்டும்.

இச்சிந்தனையின் விளக்கம் மிக எளிதன்றோ! தாம் செய்த தீச்செயல்கள் அம்பலத்துக்கு வந்துவிடும் என்று அஞ்சியே குறித்த அங்கத்தவர்கள் நடிக்கிறார்கள். காரணம் அவர்தாம் பெற்ற கல்வி அறிவின் குறைவிடமே. இங்கே தான் கல்வி மேம்பாடு உணரப்படுகின்றது.

"கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன்
நற்றாழ் தொழஅ ரெனின்"

ஐயன் திருவள்ளுவர் குறள் எத்துணைச் சிறப்பன்றோ!

கல்வி அறிவுபெற்ற ஒருவன் அல்லது ஒருத்தி விரைவில் கடவுள் நெறிதனை அறிய முடியும் எனவே கல்வியின் மேம்பாடு புலனாகின்றதன்றோ!

## எட்டாவது சிந்தனை:-

போஷாக் கில்லா வாழ்வென்றால்
போகும் சீவன் விரைவாக
வீரம் பெறவும் தேவையன்றோ!
மேவுங் கல்வி செல்வமெல்லாம்.

இந்தக் "கல்வி வளர் சிந்தனை" பற்றி விளக்கம் எழுதுவதென்றால், அது ஒரு கட்டுரையாக நீண்டுவிடும். எனினும் சிந்தனையானது எளிமையாக - மிகவும் இலகுவில் புரிந்து கொள்ளக் கூடிய ஒன்று என்பதால் பாமர மக்களும் புரிந்து கொள்வர். இதில் நாம் உண்ணும் உணவைச் சத்துள்ளதாக எப்பொழுதும் வைத்துக் கொள்ள வேண்டும் என்று தோற்றுவாய் செய்து, வீரம் பெற அத்தகைய போஷாக்கு உணவு வேண்டும் என்று வலியுறுத்தி, தொடர்ந்து **முத்திறன்கள்** பெற அதாவது வீரம் தவிர்ந்த முத்திறன்களான ஏனைய இரண்டும்- கல்வி, செல்வம் சீராகப் பெறவும் போஷாக்கு உதவுகின்றது.

வீரம், கல்வி, செல்வம் ஆகிய முத்திறன்களுள் வீரம் முதலில் பேசப்படுகிறது. இந்துசமயத்தவர் கொண்டாடும் விழாக்களுள் நவராத்திரி விழாவும் சிறப்பான ஒன்று.

அன்னை வடிவில் அமைந்த திருத்தெய்வம்
சொன்னால் அவைமூன்றுஞ் சோதியுள்ள தெய்வங்கள்
மூன்றினிலே **துர்க்கை** முதலே அவள்முகத்தில்
தோன்றும் குணமோ துடிப்புள்ள வீரமிவள்
"அன்னை வடிவ மடாஇவள் ஆதி
பராசக்தி தேவி யடா"வென் றெமக்கு
முன்னர் மொழிந்துவிட்டான் மூத்த கவியொருவன்
வீர மிலா வாழ்வு வீணாகும் எங்கட்கு
தீரம் தளராத சீர்மை தினமுண்டேல்
வாழ்வு தழைக்க வளம்பெறலாம் பின்வாழ்வில்
தாழ்வில்லை யென்றுந் தலையெனவே அன்னவளின்
பாதஞ் தொழுது பணிய அவள்அருவாள்
சாதல் வரினும் சளைக்கோமே வாழ்வுமலரும்
வாழ்த்தி அவளை வணங்கிடுவோம் போற்றி
சூழுமெனக் கின்ப சுகம்.

**துர்க்கா தேவி**யிடம் அருள் பெற்றுச், சூழும் இன்பச் சுகம் கிடைத்தவர், சுகமாகிய தேக தைரியத்தைப் பெறுவர்.

தேக ஆரோக்கியம் அதாவது **பலம்** இல்லாதவன் **பணத்தைத்** தேடமுடியாது. உடல் உழைப்பால் ஊதியம் அன்றி வியாபார வழி வகைகளால் தேடுஞ் செல்வமோ எதற்கும் தேகபலம் இன்றியமையாதது அன்றோ!

அதிஷ்டலாபச் சீட்டுக்களால் கூட ஒருவர் பணத்தைப் பெற்றாலும் அதனைப் பயனுள்ள வழியில் பாதுகாக்கவோ அன்றி செலவு செய்து செல்வத்தைப் பெருக்கவோ **பலம்** தேவையல்லவா?

இனி முத்திறன்களுள் மூன்றாவதாகிய கல்விக்கு வருவோம். "ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவர்க்கு எழுமையும் ஏமாப்புடைத்து" என்று ஐயன் வள்ளுவனும் "எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்" என்று ஔவை மூதாட்டியும் இன்னும் பலரும் கல்வியின் மேம்பாடு பற்றி எடுத்துக் காட்டி உள்ளனர்.

"கல்வி கரையில கற்பவை நாட்சில
மெல்ல நினைக்கிற் பிணிபல"

என்று கூறுகின்றது நாலடியார்.

சாதாரணமாகக் க.பொ.த.சாதாரண தரப் பரீட்சையில் அல்லது உயர் தரப் பரீட்சை எழுதும் மாணவனோ மாணவியோ வீரமின்மையால் அதாவது சுகக் குறைவால் இனம் புரியாத காய்ச்சல் அல்லது இதய நோய் என்பவற்றால் சுகந் தரும் வீரம் இழந்து எழுதிக் கொண்டிருந்த பரீட்சையின் தொடர் பாடங்கள் நான்கு, ஐந்தினைக் கூட எழுத முடியாது விட்டு விடுகின்றனர்.

ஆகையால் மேற்குறிப்பிட்ட கல்வி வளர் சிந்தனை எந்தளவுக்கு எமக்கு வாழ்வு வளம் பெற ஆற்றுப்படுத்துகின்றது என்பதை நாமெல்லாம் இப்பொழுது தெரிந்து கொண்டோம் அல்லவா? எனவே உண்ணும் உணவைச் சத்துள்ளதாக எப்பொழுதும் வைத்துக் கொள்வோம்.

**நாளை உலகின் மன்னர்தான்**
**நமது பள்ளி மாணவர்கள்**
**வேளை எல்லாம் போஷாக்கு**
**வேண்டும் வேண்டும் வேண்டுமே.**

## ஒன்பதாவது சிந்தனை :-

மனம்தான் "மனிதம்" உய்விக்கும்
மனிதம் இன்றேல் வளமில்லை
மனத்தின் ஆழம் மனமறியும்
மற்றோர் யார்தான் அதையறிவார்.

மானிடர்கள் தம் மனம்தான் எப்பொழுதும் "மனிதம்" என்ற சிறந்த உணர்வினை வெளிப்படுத்தும். அதாவது மனிதம் . ( Humanism ) இன்றேல் வாழ்வு இல்லை. அதாவது வளம் கிடையாமையால் ஏற்படுவது அது.

மனத்தின் ஆழம் அவர்அவர் மனம்தான் அறியும். மற்றயவர் யாரும் அறியார். அறியும் ஒரேயொருவர் கடவுள் தான். எனவே கடவுளை அடைய வேண்டுங் கல்வியின் அவசியம் இதனால் புலன், ஆகும் வெளிப்படும்.

"அகத்துறுநோய்க் குள்ளினர் அன்றி அதனைச்
சகதத்தவருங் காண்பாரோ தான்"

எனவரும் உமாபதி சிவாச்சாரியாரின் திருவருட்பயன் குறளும் இங்கு கவனிக்கத்தக்கது.

"மனத்துக்கண் மாசில னாதல்
அனைத்தறன்," என்பார் ஐயன் வள்ளுவனார்.

இன்னுமவர்,

"துன்பம் உறவரினும் செய்க துணிவாற்றி
இன்பம் பயக்கும் வினை" என்னும் திருக்குறட்

பாவால், அடுத்து வரும் துன்பங்கள் எம்மை வருத்தி வாட்டினும் துணிவுடன் பிறர்க்கும் எமக்கும்"இன்பந்தருஞ் செயல்களைச் செய்ய அழைக்கின்றார். இந்த உயர் துணிவு பெற சிறந்த மனித நேயம், மனிதத்துவம், மனிதம் ( Humanism ) இன்றியமையாதது. இதன் பயன் பின்வருமாறு அமையும்.

"உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல் மற்றையது
தள்ளினும் தள்ளாமை நீர்த்து" என்ற நல்லுரையால்
உள்ளங்கள் தூய்மை வழிநிற்க எந்நாளும்
கொள்ளுவோம் நல்லறிவை கொள்ளுவோம் நல்லறிவை
உள்ளத் தெளியுண்டேல் உண்டாம் ஒளிவகில்

கள்ளத் தனங்கள் கருத்தினிலே மாற்றங்கள்
கொள்ளற்க என்ற குறிக்கோளால் உள்ளபடி
சந்தர்ப்பம் வாழ்வில் சதிசெய்யும் என்றுமிதை
முந்தித் தெளிதல் முறை.

மேற்குறித்த உயர் தெளிவினைப் பெறும் ஒருவர் மேலான "மனிதம்" உடையவராக இருத்தல் அவசியமே.

கல்வி அறிவு பெற்றவர் சிறந்த மனிதம் பேணுவர். எனவே கல்வி, கல்வி, கல்வி காலமெல்லாம் கல்வி. கல்வியுடையார், பிரச்சனைகளை எதிர் நோக்கும் பொழுது, சிக்கல் வரின் மாற்றுவழியை உடன் கண்டு கொள்ள அவர்தம் கல்வி அறிவு மிகவும் உதவும்.

தொல்லை தந்த வேளையிலே
துலங்கும் மூளை நன்றாக.

இது கல்விமானுக்கு உடனடியாக வெளிப்படும். மற்றவர்க்கு மூளை இல்லையென்பது அல்ல. அதன் வெளிப்பாடு தாமதமாகும். இங்கு கல்வி அறிவால் மனிதம் பிறக்கின்றது. சிறப்பினைத் தருகின்றது.

**"மனம்தான் மனிதம் உய்விக்கும்**
**மனிதம் இன்றேல் வளமில்லை"**

*– சுகசீவன்*

## பத்தாவது சிந்தனை:-

"மனத்தின் வேகம் மையிலில் இல்லை
மனமோ! நினைத்த வேளைகளில்
பாயும் உலகக் கண்டமெலாம்
பார்க்கும் உறவோர் பலரையெலாம்."

இச்சிந்தனை எங்கள் ஈழத்தமிழர் புலம் பெயர்ந்து உலகின் பலபாகங்களிலும், வாய்ப்பும் வசதியும் இல்லாது வாழும் உறவினரை நினைக்க வைக்கின்றது. கல்வி மேம்பாடு பெற்றவர் புலம் பெயர்ந்தாலும் வாழ்க்கையைச் சமாளிப்பர். அவ்வாறில்லோர் அவர்தம் அதிஷ்டத்தைப் பொறுத்து இருப்பர். எனவே இங்கேயும் கல்வி, கல்வி, கல்வி தேவையன்றோ!

இன்று எங்கள் ஈழத்தமிழர் பலர் குடும்பம் குடும்பமாகவும், இளங்குடும்பத்தினர் ஆகவும், இளைஞர் பலரும் ஏன் யுவதிகளும் கூட புலம்பெயர்ந்து பற்பல நாடுகளில் வதிகின்றனர் என்பது வெள்ளிடமலை. இதனை

"வாழ்வும் வசதியும் உள்ளவர் லண்டனில்
தாழ்வுளோர் கூடத் தயங்காக் கடனிலே
ஜேர்மனி மற்றும் கனடா சுவிஸ்கொலன்ட்
பாரகம் விட்டுமே பற்பல நாடுகள்"

எனக்குறிப்பிடுகின்றது சமகால நிகழ்வுகள் குறிக்கும் ஒருகவிதை. இன்னவகையில் வெளிநாடுகளில் பரந்து வாழும் உறவினரை பல்லாயிரக் கணக்கான மைல்கள் கடந்து எங்கள் மனம் காண்கின்றது.

ஒரு நொடியில் லண்டனில் உற்ற மகனையும் மறு நொடியில் கனடா வாழ் மகன் குடும்பத்தினரையும் அடுத்த நொடியில் அவுஸ்ரேலியாவில் உள்ள மகள் குடும்பத்தினரையும் காணும் ஒருவர் மனம். இதனையே மனம் தான் நினைத்த நேரம் எல்லாம்,

"பாயும் உலகக் கண்டமெல்லாம்
பார்க்கும் உறவோர் பலரையெல்லாம்"

என்று மேற்படி சிந்தனை எமக்கு தெரிவிக்கின்றது. மேலும், தாயகத் தாரணி சங்கட வாழ்வதால் வாய்ப்போ வளமோ வருவது வரட்டுமென்று எம் ஈழத்து மண்ணகம் விட்டுப் புலம் பெயர்ந்தோர் பற்பலர், கல்வி எனும் செல்வம் பெறச் சங்கடம் இங்கு என்பதால் பிறநாடுகள் நாடிய இளையர் பலர். ஏன்? யுவதிகளும் கூட. இங்கே

'கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே" என்ற மூத்தோர் வார்த்தை விளக்கும் உண்மை உற்று நோக்கற் பாலது. எனவே கல்வியின் மேம்பாடு தெட்டத் தெளிவாகின்றது.

**"ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவர்க்கு
எழுமையும் ஏமாப் புடைத்து"**

*– ஐயன் வள்ளுவனார்*

## பதினோராவது சிந்தனை :-

**மரணம்** என்பது அழைக்கப்பட்ட ஒன்று அல்ல அது நியமிக்கப்பட்ட ஒன்று.

Death is not a Calling fact
it is a decided fact

மனிதவியல் வாழ்வினை மேற்கொண்ட எவரும் **மரணத்தின்** முடிவை அறிவதில்லை. இது ஆசைகள் அகற்றிட ஆத்மீக நெறி நிற்போருக்கும் பொருந்தும். "ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதாரே" எனவே எம்மையெல்லாம், கண்காணிக்கும் **கடவுள்**, அவரே எம்மதம் இவ்வுலக வாழ்வின் இறுதியினை அதாவது மரணத்தை வகுப்பார். இந்த மரணம் நோயாலும், விபத்தாலும் ஏன்? ஏழை மனம் கொண்டோர் தம்மவர்களின் தற்கொலையால் கூட நிகழ்கின்றது. இவையெல்லாம் நாம் கண்கூடாகக் காண்பவையே.

சத்தியத்தைச் சோதித்து, தற்புகழற்று சமுதாயத்துச் சீர்கேட்டை எல்லாம் தூக்கி வீசிடத் சந்ததமும் பாடுபட்ட அண்ணல் **மகாத்மா காந்தி** கூட மரணத்தை வெல்லவில்லை என்றால் எம்மவர்கள் எம்மட்டு?

கல்வி வளர் சிந்தனை உடையோர் தன்னும் அழைக்கப்பட்ட மரண நாளினை அறியாரே! இங்கு அவர் தம் பட்டறிவு பரிணமிக்காமல் போய்விடுகின்றது.

"What is not be; can never be, Is
It is to be, It can't never be other wise"

எனவே **மரணம்** என்பது நியமிக்கப்பெற்ற ஒன்றே.

கல்வி மேம்பாடுடையோர் மட்டுமன்றி, கல்வி நிறுவனம் ஒன்றில் பயிலும் மாணவ மாணவியரோ மற்றெவர்க்கும் **மரணம்** என்றோ எப்போதோ தப்பாது.

ஆறறிவு படைத்த மனித குலத்தில் வந்து அவதரித்த எவரும், மேற்குறித்த கல்விவளர் சிந்தனையை உன்னிப்பாகவும், உளம் ஒன்றியும் எண்ணிடல் வேண்டும். மானிடவியல் வாழ்வுக்கு வழிகாட்டிய **ஐயன் வள்ளுவனின்** கூற்றாகிய

"ஊழிற் பெருவலி யாவுள" என்பது இங்கே ஊன்றி நோக்கற் பாலது.

"எழுதிச் செல்லும் விதியின்கை

எழுதி எழுதி மேற் செல்லும்", ஆகையால் மனிதகுலம் வளம்பெறக் கல்வி கருவூலம். பூரணத்துவமான உயர் கல்வி பெற்ற ஒருவன் மரணத்தின் பின்னும் உலகில் பெயரோடும் புகழோடும் வாழ்கின்றான்.

**அவன் மரணத்தைவென்றவன் அன்றோ!**

## பன்னிரண்டாவது சிந்தனை:-

### மனிதனும் மிருகமும்

"கல்வி வளர் சிந்தனைகள்" என்னும் இந்த நூலில் ஒரு சிந்தனையாக இரண்டே இரண்டு சொற்களில் அமைந்த மேலான ஒரு சிந்தனை **இதுவாகும்**.

"கல்வி வளர் சிந்தனைகள்" என்பது முத்தான மூன்று தமிழ்ச் சொற்களைக் கொண்ட சொற்றொடர் ஆகும். இதனை விரித்துப் பொருள் தேடின் கல்வியினால் வளர்ந்த, வளருகின்ற, வளரும் சிந்தனைகள் என விளக்கம் பெறலாம். **கல்வி, கல்வி, கல்வி காலமெல்லாம் கல்வி,** என்பதை யாரும் மறுக்க இயலாது. **வளர் சிந்தனைகள்** என்பது **வினைத்தொகை** என்னும் இலக்கணத்தின்பாற்படும்.

இனி, மனிதனும் **மிருகமும்** சிந்தனைக்கு வருவோம். "மநு" என்னும் வேர்ச்சொல் (அடிச்சொல்) [The Root Word] சிந்தித்தல் என்னும் பொருளைத்தரும். சிந்திப்பவனே மனிதன். சிந்தனை மேலோங்குவது மனிதன் பெற்ற பகுத்தறிவால் அன்றோ! மிருகத்துக்குப் **பகுத்தறிவு** இல்லை அல்லவா? இதனை எண்ணிப் பார்க்கவும்.

இருந்தபோதும் மனிதர் மிருகத்தனமாக அதாவது பகுத்தறிவு அற்று, வாழ்க்கையில் பல சந்தர்ப்பங்களில் நடந்து கொள்கிறார்கள். இது தவிர்க்கப் பெறவேண்டும். தவிர்த்தால் வாழ்வில் உயர்வு, இன்றேல் தாழ்வு.

எந்த ஒரு மனித ஜீவராசியும் மனிதக் குணநலன்கள் நிரம்பி வழியும் வேளைகளில் கூட மிருகக் குணத்தையும் சந்தர்ப்ப சூழ்நிலைகளால் பெற்றுவிடுதல் அறிகின்றோம். இதனை விட்டொழிக்க வேண்டுமெனின் மேலான இறைசிந்தனை பெறல் அவசியம். தொடர்ந்து வரும் மானிடவியல் வாழ்வில்

அவசியமானதும் அவசரமானதும் ஆன பொருளாதார இடைஞ்சல்கள் அல்லது வேறு ஏதும் காரணங்களால் பகுத்தறிவு பறிபோகக் கல்வி இயல்பிற் திரிந்து அதாவது மாறுபட்டுவிடும் மனிதர்கள் தாம் பலர். இங்கு மேலோங்கி நிற்பதுவே மிருகக் குணம்.

இவ்வேளைகளில், தூயமனம், தூயசொல், தூயசெயல் என்பவற்றைப் பேணிக்காக்க வேண்டும். இதற்கு அத்தியாவசியமானதுவே **இறை உணர்வு.** இவ்வுணர்வு மேலோங்க மிருகக் குணங்கள் மின்னலென மறைந்துவிடும். இவ்வுயர் கல்வி வளர் சிந்தனை பற்றிச் சிந்திப்போம். சிறந்த வழியில் இனியாவது செயற்படுவோம். **"சீர்பெறுவோம் என்றுஞ் சிறந்து"**

## பதின்மூன்றாவது சிந்தனை :-

"மனிதன்" மனிதனாக நடக்க வேண்டும்.

சிந்திப்பவன் மனிதன் "மநு" என்னும் வேர்ச் சொல் சிந்தித்தல் என்ற பொருளைக் குறிக்கும். உலக ஜீவராசிகள் அனைத்திலும் மேலானவன் மனிதன். காரணம் அவனிடம் பகுத்தறிவு என்னும் ஆறாவது அறிவு உள்ளது. இது நல்லது இது கெட்டது என்று அவனால் தீர்மானிக்க முடிகிறது.

இன்றைய உலகம் அவசரமானது. "அவசரமான உலகத்திலே அண்ணன் ஏதடா தம்பி ஏதடா" என்கிறது ஒருசினிமாப் பாடல். இது அந்தச் சினிமாப் படத்தில் வரும் கதைக்கு ஏற்ற கவிதை தான். இக் கூற்றிலும் உண்மை உண்டு. மனிதன் மனிதனாக நடந்தால் இது அவசியம் இல்லையே. சில மனிதர்கள் கள்ளத்தனம், கொண்ட கருத்தினில் மாற்றம், சந்தர்ப்ப சூழ்நிலைகளால் "மனிதம்" தவறிவிடல் காண்கிறோம். மேலும் ஒவ்வொரு தனி மனிதனும் சந்தர்ப்ப சூழ்நிலைகளால் அவசியமானதும் அவசரமானதும் ஆன பொருளாதார இடைஞ்சல்கள் அல்லது வேறு ஏதும் காரணங்களால் தன்னியல்பில் திரிகின்றான். இங்கே "மனிதம்" தவறிவிடுகின்றது.

மனிதன் மனிதனாக நடப்பதற்குத் தூயமனம், தூயசொல்,

தூயசெயல் என்பவற்றைப் பேணிக் காக்க வேண்டும். அப்பொழுது தான் அவன் மனம், வாக்கு, காயத்தால் தீங்கின்றி வாழமுடியும். இதுவே அறவழி, நல்வழி எனவே அவ்வழியில் நாம் செல்வோம்.

**நலம்பெறுவோம் என்றும் நயத்து.**

## பதினான்காவது சிந்தனை :-

கல்வி கற்ற பெரியோரைக்
காலம் எல்லாம் மதித்திடுவோம்

கல்வி கற்ற ஒருவர் தன்னுடைய பிறந்த நாட்டில் மட்டுமன்றிச் சென்றவிடமெல்லாம் சிறப்புப் பெறுவர். அவர் சென்ற சென்ற நாடுகளில் எல்லாம் மதிப்பையும் மரியாதையையும் பெற்று வருவார். இதனையே தமிழ் மூதாட்டி ஔவையார்,

"மன்னனும் மாசறக் கற்றோனும் சீர்தூக்கின்
மன்னனிற் கற்றோன் சிறப்புடையன் - மன்னர்க்குத்
தன்தேசம் அல்லாற் சிறப்பில்லை கற்றோர்க்குச்
சென்றவிட மெல்லாம் சிறப்பு"

எனப் பாடியுள்ளார்.

"ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவர்க்கு எழுமையும் ஏமாப்புடைத்து" என ஐயன் வள்ளுவனால் சிறப்பிக்கப் பெற்ற கல்வியைப் பெற்ற ஒருவர் அக்கல்வியின் பயனால் நல்லவர் ஆகிறார். "நல்லாரைக் காண்பதுவும் நன்றே" "அவ்வினை யாளரொடு பயில்வகை ஒருகால்" என்பது நன்னூல் இலக்கணம். கல்வி கற்ற ஒருவருடன் பழகும் பொழுது கால்வாசி அறிவை நாம் பெற்றுக் கொள்ள முடியும் என்பதே இவ்விலக்கண விளக்கம்.

"மண்கண்ட வெண்குடைக் கீழாக மேற்பட்ட மன்னருமென்
பண்கண்ட அளவில் பணியச் செய்வாய்"

எனவரும் சகலகலாவல்லி மாலை ஈற்றுச் செய்யுள் ஈண்டு (இங்கு) நோக்கத்தக்கது.

கல்வி கற்றோரை மெல்ல அணுகிப் பணிவுடன் உரையாடும் பொழுது எம்மவர் அறிவு மேலும் பெருகும்.

வீசு புகழ்சேர் மன்னவர்கள்
மேலாம் கல்வி யாளருடன்
பேசின் பெரியோர் கல்வியினர்
பிரியம் அவர்மேல் வைப்போமே - *"சுகசீவன்"*

**பெரியோருக்குப் பணிபுரிவதால்**
**அறிவு கிட்டும்**

*- "கல்விச்சிந்தனைகள்," வினோபா நூலில்*

## பதினைந்தாவது சிந்தனை :-

தொல்லை தந்த வேளையிலே
துலங்கும் மூளை நன்றாக.

ஒரு மனிதன் எண்சாண் உடம்பு உடையான். இவ்வுடம்பில் தலையே பிரதானம். இதில் இருப்பவற்றுள் கண்கள் மேலானவை. "கண்ணிற் சிறந்த உறுப்பில்லை என்பதும் காட்டியதே" என்று மணிவாசகர் திருக்கோவையில்குறிப்பிடுகின்றார். கவிச்சக்கரவர்த்தி கம்பர், இராமாயண காவியம் - கைகேயி சூழ்வினை படலத்தில், தசரதன் கூற்றாக "கண்ணே வேண்டும் எனினும் ஈயக்கடவேன்" என்கின்றார். இங்கே மேற்படி கல்வி வளர் சிந்தனையில் குறிப்பிடப் பெற்ற உறுப்பு மூளை. இதுவும் தலையில் அமைந்துள்ளது. இதனைப் பிரதான அலுவலகம் (Main office) எனலாம். எல்லோர்க்கும் மூளை இருப்பது இயல்பு. எனினும் கல்வி பெற்ற ஒருவரின் மூளை விரைவாக வேலை செய்யும் இதனைப் பாலர் "பாமலர் நாற்பது [40] நூலில் கல்வி", என்னுங் கவிதையில்,

'கல்வி காலம் என்றென்றும்
கசட றத்தான் கற்போம்நாம்
தொல்லை தந்த வேளையிலே
துலங்கும் மூளை நன்றாக"

எனப் பாடப்பெற்றுள்ளது.

கல்லாத ஒருவர்க்குக் கூட மூளை இருப்பது கண்கூடு. எனினும் தேவையான சந்தர்ப்பங்களில் அவர்தம் மூளை விளக்கம் பெறத் தாமதமாகும். ஆனால் கல்வி பெற்ற ஒருவரின் மூளை மிகத்துரிதமாக வேலை செய்யும். பல சந்தர்ப்பங்களில்,

பிரச்சனைகள் எழும்பொழுது, வரும் சிக்கல்களை உடனுக்குடன், சிந்தித்த ஒரு செயற்பாடு சரிவராவிட்டால், மறுகணமே புதிய சிந்தனையால் எழுந்த, சிக்கல் தீர்க்கப் பெற்றுவிடும். இக்காலம் வெட்டியாடுவதில் அவன் வீரன் எனச்சற்று விவேகமாகவும் வேடிக்கையாகவும் சிலர் பேசிக் கொள்வதைக் காண்கிறோம் அல்லவா? இக் கருத்துக்களையே மேற்படி சிந்தனை வலியுறுத்திக் கூறுகிறது.

**கல்வி கல்வி கல்வி**
**கால மெல்லாம் கல்வி**
*சுகசீவன்*

**பாடை ஏறினும் ஏடது கைவிடேல்**
*பாரதிதாசன்*

**ஓடையிலே என்சாம்பல் கரையும் போதும்**
**ஒண்தமிழே சலசலத்து ஓடல் வேண்டும்**
*மாவிட்டபுரம் ஐயா சச்சிதானந்தம்*

## பதினாறாவது சிந்தனை :-

அன்பு அன்பு அன்பு
அகிலம் போற்றும் அன்பு!

அன்பு தமிழினத்தின் வழி; அது ஓர் உயிர் நிலை மட்டுமன்றி உயர் நிலையும் கூட; இறைவனைத் தலைவனாகவும், பிள்ளையாகவும், தோழனாகவும் பாவித்து அன்பு பாராட்டுவது தமிழினத்தின் இலக்கிய மரபு; என்பனவெல்லாம் பல்வேறு அறிஞர்கள் கருத்து ஆகும். குழந்தை பிறந்தவுடனேயே, கெற்பத்தில் தாயாரால் பதிக்கப் பெற்ற இனம் புரியாத அன்பு அவளால் வெளிப்படுத்தப் பெறுகிறது. தாய் காட்டும் பாரிய அன்பால் பிள்ளை அவள் மேல் வைக்கும் பிரியமும் அன்பு ஆகிறது, பெற்ற தாய் தரும் அன்பு பேச இயலாதது. "பால் நினைந்தூட்டும்" தாயல்லவா அவள்.

"அம்மா அன்பு வைப்பாள் அப்பா அன்பு செய்வார்
அக்கா தங்கை மற்றும் அண்ணா தம்பி கூட" என வரும் பாலர் பாமலர் நாற்பது [40] நூலின் கவிதை ஒன்று

குடும்பத்தில் அன்பின் பிணைப்பையும் பாசத்தையும் வெளிக்கொணர்கின்றது. அன்பை வெல்ல உலகில் வேறு ஒரு அரிய பொருள் இல்லை. அன்புடையோரை என்றும் அகிலம் போற்றும். "அன்பே சிவம்" என்கிறது திருமந்திரம். "Love is God", அன்பே கடவுள் என்பது முடிந்த முடிவு.

"அன்புக்கும் உண்டோ அடைக்கும்தாழ் ஆர்வலர்
புன்கண்ணீர் பூசல் தரும்" என்று திருக்குறள் கூறுகின்றது.

அன்பு இல்லாதவர் தமக்கே உரியர். அன்புடையோரே பிறர் துன்பம் கண்டு இரங்குவர். இதனாலேயே அவர் அறஞ்செய விரும்புவர். பகுத்தறிவற்ற விலங்கு பறவைகள் கூட அன்பைத் தமது எச்சங்கள் மேற் காட்டுவதை நாம் தினமும் காண்கிறோம். அன்பு எந்த வடிவிலும் எம்மை உய்விய்ப்பதால் அன்பு அன்புதான் "அன்பில்லாத உயிர் இல்லறத்தோடு கூடி வாழ்தல் வன்பாலின் கண் வற்றல் ஆகிய மரம் தளிர்த்தாற் போன்றது. வன்பால் என்பது வல்நிலம். வல்நிலத்தில் வற்றல் மரம் தளிர்த்தல் இயலாது. அதுபோல அன்பில்லாத உயிரும் இல்லறத்தோடு கூடி வாழ்தல் இயலாது" இது ஐயன் வள்ளுவரின் அன்புடைமை அதிகாரத்தில் காணப்படும் கருத்து ஆகும்.

**அன்பு அன்பு அன்பு அகிலம் போற்றும் அன்பு**
**அன்பு இல்லார் என்றும் அறத்தைச் செய்யமாட்டார்.**

- *சுகசீவன்* -

பாசம், நட்பு, காதல், ஏன்? பக்தியும் கூட அளவில் மாறுபட்ட **அன்பு** தான் என்பது உணரப்படல் வேண்டும். இதுவரை விதந்துரைத்த அன்பு, ஆசிரியர்கள் மாணவரிடத்திலும், மாணவர்கள் ஆசிரியரிடத்திலும் வைத்தல் இன்றியமையாதது. இதனை இக்காலம் தேடற்கரியது எனப் பெற்றோர், நலன் விரும்பிகள்தம் குரல்கள் எதிர் ஒலிக்கின்றன. மாற்றம் விளையும் சமுதாயத்தில் இதுவும் மாற வேண்டும். இதனால் கல்வி வளம் நிட்சயம் மேலோங்கும். காண்போம் கல்விவளம். காலம் என்றும் அது உதவும்.

**அன்பு மிகுந்த தெய்வம் உண்டு**
**உயிர்களிடத்தில் அன்பு பேணும்**
**அன்பென்று கொட்டு முரசே**

- *மகாகவி சுப்பிரமணிய பாரதியார்*

# அநுபந்தம்

கடந்த ஆண்டு, 30. 11. 2001 கார்த்திகைத் தீபத் திருநாளன்று கச்சாயூர் பண்டிதர், கவிஞர் **சுகசீவன்** ஆகிய என்னுடைய சிறப்பு நூல்கள் ஐந்தினதும் 5 வெளியீட்டு விழா அருள்மிகு கச்சாய்க் **கண்ணகை அம்மன்** வசந்த மண்டபத்தில் இனிது நிறைவேறிய வேளை "கல்விவளர் சிந்தனைகள்" என்னும் இந்நூலில் ஒருபகுதி அச்சிலும், மிகுதி கையெழுத்திலும் தான் அரங்கேறியது. அடுத்து முயன்றாலும் ஆகும் நாள் அன்றி எடுத்த கருமங்கள் ஆகா என்ற தமிழ் மூதாட்டி ஔவையார் கூற்று இவ்வேளை மனங்கொள்ளத்தக்கது. இன்று 07.04.2002 சஷ பணி நிறைவு பெற்றமைக்கு இறைவன் தாளினை பணிகின்றேன்.

என்றும் **இறையருள்**

*– அன்புடன் "சுகசீவன்"*

# தமிழ் எங்கள் உயிர்

1. தமிழ்எங்கள் உயிரென்று எண்ணு - இதைத்
தப்பாமல் யாவர்க்கும் நித்தமும் சொல்லு
அமுதொத்த மொழியிதை நீயும் - என்றும்
அள்ளிப் பருக மறந்து விடாதே.
( தமிழ் எங்கள் )

2. உலகினில் மொழிபல உண்டு - ஆனால்
உண்மையில் தமிழுக்கு ஈடேது முண்டோ
இலகிடும் மொழிபல எல்லாம் - எங்கள்
இன்பத் தமிழுக்குப் பின்வந்த தன்றோ
( தமிழ் எங்கள் )

3. சொல்ல மொழிதரும் இன்பம் - எங்கள்
சொட்டு மருந்தமிழ்க் கேதினம் சொந்தம்
மெல்லப் பிறர் சொல்லக் கேட்க - நித்தம்
மெத்தப் பிறந்திடும் மிக்கபே ரின்பம்
( தமிழ் எங்கள் )

4. அள்ளித் தமிழினைப் பரப்ப - நம்மால்
ஆன முயற்சிகள் எங்கனுஞ் செய்வோம்
பள்ளிச் சிறுவர்கள் நாங்கள் - என்றும்
பாடி எழுதிப் பரப்புவம் தாயை.
( தமிழ் எங்கள் )



# நீறு வாழ வந்தவர், நேர் சைவம், சீர்தமிழர் செப்பு புகழ்

நல்லைநகர் **நாவலர்**தான் நம்சைவக் **காவலர்**
இல்லை அவரென்றால் எம்நிலைமை என்ன?நிலை
சைவம்தான் மட்டுமா! எம்மினிய தமிழ்மொழிக்கு
ஐயன்அவர் என்றிட்டால் ஆச்சரியம் ஏது?மில்லை
அக்கால அந்நிய நேர்சமய காலத்தில்
மிக்க தையிரமாய் மேல்நின்றார் · "**நாவலனார்**",
**ஐந்தாம் குரவரென** ஆக்கிவைத்த சேவைதனை
முந்துபுகழ்க் கற்றறிந்தோர் முன்வைப்பார் யார்?மறுப்பார்
சைவவுலகு அன்னவர்க்கு தக்கபல நன்றிகளை
மெய்யாக்கல் வேண்டுமன்றோ! மேன்மையிது தானன்றோ!
வாரா வளம்தந்தார் வையத்தில் **நாவலனார்**
பாரத நாட்டுத் தமிழ்உலகில் பார்சேவை
ஆரும் அறியவைத்தார் ஆங்குநற் பள்ளிவைத்தார்
பேரும் புகழும் பெரிதாய் அவர்பெற்றார்
அச்சகம் ஆனபல மேலான சேவைகளை
இச்செகம் தான்மறவா என்றுமிது உண்மைதான்
பொங்குபுகழ்க் **கல்வி**க்காய் போற்றும் பெருஞ்சேவை
மங்காது என்றுமே மங்கா மதிப்போம்நாம்
ஓங்கும்அவர் சேவையால் உய்ந்திடுவோம் நாமெல்லாம்
தீங்குபிறர்க் காற்றாத் **திருவுருவம்** ஆமவரே!
வாழ்க!அவர் நாமம் வளர்க!! **தமிழ்சைவம்**
சூழ்க!!!—தினம் என்றுஞ் சுகம்.

# தமிழ் உலகு என்றும் போற்றும் பெருமகன்
## நல்லைநகர் ~ ஆறுமுக நாவலர்

குறிப்பாக யாழ் குடா நாட்டில் அன்றி, இந்து சமுத்திரத்தின் முத்தென வர்ணிக்கப்பெறும் இலங்கைத்தீவில் மட்டுமன்றி எம் தாய்த்திருநாடாம் பாரதத்தில் தென்னிந்தியாவிலும் சிறப்பாக இன்றைய தமிழகத்திலும்; சைவமும் தமிழும் தலையோங்கி வாழச் செய்தவர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்கள். இவர் நீறுவாழ்ந்தவர். நேர் சைவம், சீர்தமிழராம் இவரின் செப்பு புகழ் எழுத்தில் எழுதி நிறைவு செய்ய முடியாது.

நல்லைநகர்ப் பிறந்து, நாமுஞ் சிவநெறிக்காய் எல்லையிலாத் தொண்டை இயற்றிய வல்லவராம், நல்லவராம் நாவலர் அவர்களால் எம் சைவமும், தமிழும் தலையோங்கியது. என்றென்றும் நாம் மறவா ஏந்தல் ஆறுமுக நாவலர் அவர்கள், சைவ வேளாளர் மரபிலே கந்தப்பிள்ளை, சிவகாமியம்மை தம்பதியர்க்குத் தவத்திருமகனாக 1822ம் ஆண்டு மார்கழித் திங்களில் பிறந்தார்.

ஆரம்பத்தில், திண்ணைப்பள்ளியில் படித்தவர். பன்னிரண்டாம் வயதில் பார்சிவல் பாதிரியாருடைய பாடசாலையில் ஆங்கிலமும்; சேனாதிராய முதலியார், சரவணமுத்துப் புலவர் முதலிய வித்துவான்களிடம் தமிழும் படித்தார். இவரின் பத்தொன்பதாம் வயதில், இவரின் இரு மொழித்திறமை கண்டு வியந்த பார்சிவல் பாதிரியார்; தமது பாடசாலையில் தமிழ், ஆங்கில உபாத்தியாயராகவும் தமக்கு தமிழ்ப் பண்டிதராகவும் அமர்த்திக்கொண்டு பைபிளைத்தூயதமிழில்மொழிபெயர்க்கச் செய்தார்.

பிற மத வேதாகம நூலாகிய பைபிளை மொழிபெயர்த்து வருங்காலத்தில் தமது சமயத்தின் சைவசித்தாந்த அறிவெல்லாம் பெற வேணவாக் கொண்டு, அவற்றையும் சகல திருமுறைகளையும் கற்றுத் தேர்ந்து சமஸ்கிருத அறிவையும் பெற்று, சைவ ஆகம நுண்அறிவையும் பெற்றார், புராண படன அறிவும், தருக்க சாஸ்திர அறிவும் பெற்றார். சைவ அனுஷ்டானத்தில் என்றும் தவறாது வாழ்ந்தவர் நாவலர்.

இவர் காலத்தில், பாதிரிமார் மதமாற்றத்தைக் கையாண்ட முறைகளைக் கணடு வருத்தமுற்றார். இல்வாழ்க்கையில் புகாமல், சைவசமய வழர்ச்சிக்குத் தம்மை அர்ப்பணித்தார், இதனால் "ஐந்தாங் குரவர்" எனப்பின்னால் சைவத் தமிழ் அறிஞர்களால் சிறப்பிக்கப்பெற்றார். பல மாணவர்க்கு தாம் பெற்ற புலமை யாவையும் புகுத்த, இராக்கால வகுப்புக்களை இலவசமாக நடாத்தினார். சிறந்த சொற்பொழிவாளர் ஆகிய இவர் சைவசமயச் சொற்பொழிவுகளைப் பொழிந்து தள்ளினார். சமுதாயத்தில் பரவி வரும்

மதமாற்றத்திற்கு எதிராகக் கண்டனப் பிரசங்கங்களை ஆற்றினார். புராணபடனத்தை ஆரம்பித்துக் கந்தபுராணக் கலாசாரத்தினைச் சிறப்பாக வளர்த்தார். தமது இருபத்தாறாவது வயதில், தமது பள்ளி ஆசிரியர் பதவியை விடுத்து, யாழ்ப்பாண நகரத்தில் சைவப்பிரகாச வித்தியாசாலையை ஆரம்பித்து வைத்தார். இவர்தம் மாணவர்களே ஆசிரியர்கள் ஆனார்கள். இவர் மருமகனும் மாணவனுமான வித்துவ சிரோன்மணி பொன்னம்பலபிள்ளை பாடம் சொல்லுவதிலேயே காலம் கழித்தார். சபாபதி நாவலரும் இவருடைய மாணவர்களில் சிறந்தவர்.

தமிழ் நாடு முழுவதும், சிதம்பரம் முதலிய முக்கிய தலங்கள் தோறும் சைவ வித்தியாசாலைகளை அமைக்க மன விருப்பம் கொண்டு அங்குச் சென்றார். நாவலர் என்ற பட்டம் இருபத்தேழாவது வயதில் திருவாவடு துறை ஆதீனத்தால் வழங்கப்பெற்றது. சமய நூல்களை எழுதி அச்சிட்டும், பழைய நூல்களைப் புதுப்பித்து அச்சிட்டும் பல்லாக்கம் செய்தார். அச்சு இயந்திரம் நிறுவினார். ஆன பல் தொண்டு செய்தார். பால பாட நூல்கள் செய்தார். புராண வசன நூல்கள் சூசனம் எனபவையும் எழுதினார். முதலாம் இரண்டாம் சைவ வினாவிடை, நித்திய கருமவிதி, பல நூல்களுக்கு உரைகளை எழுதினார், பதிப்பித்தார். இவரின் கட்டுரை, சொற்பொழிவுகள் நாவலர் பிரபந்தம் என்ற பெயரில் நூலுருப் பெற்றுள்ளது.

வசன நடை கைவந்த வல்லாளர் நாவலர், செந்தமிழின் உரை நடையின் சீரிய வேந்தனிவர். சைவம் தமிழ் இரண்டையும் தக்க இரு கண்களாய்த் தெய்வத் திருவழியில் நின்றமையால் எமை வாழ வைத்தார்.. ஐந்தாம் குரவராக நாம் மதித்து அன்னார்க்குச் சிலை வைத்தோம். மரபு வழிகாத்து அவ்வழியில் பலநூறு எழுத்தாளர்களை தோன்றச் செய்த தொன்னெறியாளர் நாவலராவார். நாஸ்திகம் பரவாமல் ஆஸ்திகம் நிலை நிற்கச் செய்த நாயகன். கல்வி, கல்வி, கல்வி எனக் காலமெல்லாம் நாம் பெற வைத்த கற்பகம் அவர். ஆண்டுகள் பல்லாயிரம் கழிந்தாலும், தீங்கு பிறர்க்காற்றாத திருவுருவம் நாவலர், நம் சைவத் தமிழ் உலகில் என்றும் மிகவாழ்வார். வாழ்க! அவர் நாமம். வாழ்க!! அவர் சேவை. வாழ்க!!! தமிழ் சைவம்.

## தென்னிந்திய திருச்சபைப் பேராயர் அதிவண கலாநிதி எஸ். ஜெபநேசன் அடிகளார் "பேரறிஞர்" பட்டம் பெற்றமைக்கு

## நல்வாழ்த்துக்கள்

ஆன்றவிந்த கொள்கைச் சான்றோர் மரபினிலே
ஞான்றும் தமிழ்ச்சேவை அன்றி மதச்சேவை
என்றும் அறிவுப் பணியோடு ஆத்மீகம்
ஒன்றியநல் ஆங்கில நற்புலமை ஊர்உலகம்
தானறிய வைக்கும் தனிச்சேவை போற்றிடுவோம்
வானகமும் மண்ணும் வியக்கும் வண்ணமதாய்
நூற்படைப்பும் கற்றோர் நுவலுகின்ற நல்லாய்வுப்
போற்றலுடைக் கட்டுரைகள் தாமதற்குச் சூட்டிய
**"பேரறிஞர்", சீரமகுடம்** நற்சிறப்பே! வாழ்த்துகின்றோம்!!
ஆரும் பெறாநல் அறிவு சுவறட்டும்
என்றும் தொடர்க இனிய அரும்பணிகள்!!!
நன்றே பெருக அறிவுநல் ஆத்மீகம்
குன்றென நின்றுயர்க! கொள்கைகள் மேலோங்க!!
நன்றுநீர் வாழ்வீர்!!! நனி

*** ***

"பேரறிஞர்" பட்டம் பெறுதல் தகுதியென்ற
சீருடைய 'லண்டன்' கேம்பிறிட்ஜ் பல்கழக
நல்"வர லாற்றாய் உடைய நிறுவனம்"
தொல்புகழாய் வாழ்க! சுகம்

# மாணவர் கடமை

கடமை என்பது செய்பவை. அது சிறப்பாக அமைவது பிரதானம். "என்கடன் பணிசெய்து கிடப்பதே" என்னும் திருமுறைவாக்கும் இங்கு கவனிக்கப் பெறவேண்டும். நாளை உலகினிலே நாடாழும் மன்னவர்தான் சூழும் எமது பள்ளி மாணவர்கள். இன்றைய மாணவரே நாளைய சமுதாயத்தின் சிற்பிகள். நாளை உலகம் அவர்களின் பாற்பட்டது. ஒரு நாட்டின் ஆக்கமும் அழிவும் அவர்தம் கைகளிலேயே தங்கியுள்ளது. இதனை மனித சமுதாயம் ஏற்றே ஆகவேண்டும்.

எந்த ஒரு நாடும் நல்லதொரு நாடாய் இருப்பதற்கு மாணவர்தம் சிந்தனைகளும் அவர்தம் செயற்பாடுகளும் மேலானவை. தனிஒரு மனிதனால் எத்தனையோ பேரரசுகள் உருவாக்கப் பெற்றமையை நாமறிவோம். அண்ணல் காந்தி அடிகளால் பாரதத்தாயாம் இந்தியா விடுதலை பெற்றதும் இதே நூற்றாண்டில் வாழ்ந்த ஜேர்மனியச் சர்வாதிகாரி ஹிட்லரால் அவன் பிறந்த நாடும், உலகோரும் ஆண்டுபலவாக அளவிட்டுக் கூறமுடியாத அளவு அவலங்களை அடைந்ததுடன் பல லட்ச மக்கள் கொலையுண்டதும் வரலாறு தரும் சான்றன்றோ! எனவே மாணவர் மாணவப் பருவத்தில் சிறந்த சிந்தனை பெறவும் மேன்மைமிகு செயற்பாடுகளைக் கொண்டு உயர்பண்பினை எதிர்காலத்தில் பெறவும் ஆன பல நல்வழிகளில் வழிநடத்தப் பெறல்வேண்டும். இப்பாரிய பொறுப்பு அதிபர், ஆசிரியர் அத்தோடு கல்வித் திணைக்களப் பொறுப்பாளர்களிடமே அதிகம் உள்ளது. மாணவர் தம் உயர்வுக்கு அத்திவாரம் வீட்டில் தாய்தந்தையர் மற்று உறவோர்தம்கைகளால் இடப்படல் வேண்டும்.

வீடு, பாடசாலை, சமூகம் என்பவை எம்மாலேயே வளம்பெற வேண்டும் என்ற உயரிய இலட்சியங்களுக்கு மாணவர் வழிநடத்தப் பெறல் வேண்டும். இன்றைய மாணவர் நாளைய சமுதாயத்தின் சிற்பிகள் என்ற முன்னுரையில் குறிப்பிட்ட பாரிய உண்மை நிலை பெறவேண்டும். "வீடு ஒரு சிறந்த பாடசாலையாகும் மாணவர்தம் உயரிய சிந்தனை, எண்ணக் கருக்கள் உருவாகும் சூழல் வீடே" என்ற அண்ணல் காந்தி

அடிகளின் மேலான கருத்தினையும் மாணவர்க்குத் தொடர்புடையோர் எடுத்துச் சொல்லல் வேண்டும்.

பாடசாலையில் மாணவர்தம் இயல்பூக்கங்கள் தூய்மைப்படுத்தப்படல் வேண்டும். குறிப்பாக இளங்குமரப் பருவத்தில் அவர்களது உயரிய சிந்தனைகளும் செயற்பாடுகளும் அதாவது செயல் ஆற்றல்களும் ஆக்கவழியில் பயன்பெறல் வேண்டும். அப்போதுதான் எதிர்காலத்தில் அவர்கள் வீட்டிற்கும் நாட்டிற்கும் ஆக்கபூர்வமான அரும்பணிகளைச் செய்வார்கள். மறைந்தும் மறையாத பிரதமர் நேரு அவர்களின் ஆரம்பக்கல்வி வீட்டிலேயே நடைபெற்றது. வீடே அவருக்கு ஆரம்பப் பாடசாலை. உயர்தரக் கல்விக்காகவே அவர் பாடசாலை (இலண்டன்) சென்றார். வீட்டில்தான் அவர் சிறந்த முறையில் பழக்கப்பட்டார். இதனை அவர் தனது சுயசரிதையில் எவ்வளவு அழகாகக் குறிப்பிட்டுள்ளார்.

மாணவர் கடமை, கற்றல் மட்டுமன்றி கற்றபடி நிற்றலும், உலகத்தோடு ஒட்ட ஒழுகலும் அவர்களது கடமை ஆகும்.

"கற்கக் கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக" என்றார் ஐயன் வள்ளுவனார்.

இன்றைய அகில உலகிலும் மாணவ சமுதாயம் ஒரு வலிமை உள்ள சமுதாயமாக மாறிவருவது கண்கூடு. எதிர்காலத்தில் அவர்கள் பொறுப்புக்களும் கடமைகளும் அதிகம். எனவே, அவர்தம் கடமை உணர்ச்சி, கட்டுப்பாடு, சால்பு, செயலாற்றல் யாவும் சிறந்தவழியில் அமையத் தொடர்புடையோர் யாவரும் கண்காணித்துக் கொள்ளல் வேண்டும்.

இளமை மகத்தானது. ஆயிரமாயிரம் அழகுக் கற்பனைகள் அகத்தே தோன்றும் வசந்த காலம் அதுவன்றோ! இக்காலத்தில் மாணவர் அன்பு, அடக்கம், அருள், வாய்மை பெற்றுச் சமூகம், பொருளாதாரம், அறிவியல், அரசியல் ஆகிய துறைகளில் தெளிந்த அறிவைப் பெறல் வேண்டும். அதன் மூலம் அகிலம் போற்றும் அறிவாளிகளாக அவர்கள் மிளிர்வர். அவரால் வீடும் நாடும் சிறக்கும். அகிலத்தில் சாந்தி, சமாதானம், அமைதி, சுபீட்சம் என்பவற்றைக் காணலாம்.

**"கடமை கண்ணியம் கட்டுப்பாடு" வளர்க**
**வளம்பெறுவோம் என்றும் மகிழ்ந்து.**

# கலை என்றால் என்ன?
## [ What is Art]

மனிதத் திறன் வெளிப்பாடு ஆகிய கலை என்பது; வண்ணம், அழகு, முருகு எனப் பல்வேறு சொற்பதங்களைக் கொண்டு விளங்குகின்றது.

ஆதிகால மனிதன் தன் ஓய்வு நேரங்களில், எழுந்த உள்ளுணர்வு உந்தல்களால், வாய்விட்டுப் பாடினான். இப்பாட்டால் எழுந்தது இசை (Music) இதுவும் ஒரு கலையே (Art) இன்னுமவன், தன்கையால் நிலத்தில் சித்திரங்களைத் தீட்டினான். வண்ண மயிலையும், வடிவழகு மானையும், நிலத்தில் கீறிப் பார்த்தான். பின்னர், அவற்றைக் கற்பாறைகளில், கிடைத்த பச்சிலைச் சாற்றைக் கொண்டு படம் படைத்தான்.

இந்த வகையில் சங்கீதமும், தக்க சித்திரக் கலையும் வளரலாயிற்று. சித்திரம் தீட்டிய சிந்தனையாளர்கள், அச்சித்திர வடிவங்களை உருவமாக்க, கற்பாறைகளைக் கண்டு, அச்சித்திர வடிவங்களைச் சிற்பமாக்கினர். இந்த வகையில் வளர்ந்தது சிற்பக்கலை.

சங்கீத இசைக்கலையும், சித்திர நற்கலையும் சேர்ந்த உயர் சிற்பக்கலையும், இவ்வாறு வளர்ந்து வருங்காலத்தில், **மனிதன்** சிந்திப்பவன் அன்றோ! அதனால் எழுந்தது விஞ்ஞான விந்தைகள். இதன் விளைவுகள் பல. **விஞ்ஞானமும்** ஒரு கலையாகி, மேன்மைமிகு கண்டுபிடிப்புக்கள் மேலோங்கின.

இன்று **கலை உலகம்**; எங்கும் **கலைகள்**; இனிய புதுமுறையில் நாமறிவோம். விஞ்ஞானக் கல்வி, இன்றுலகில் மிக வளர்ந்து, அஞ்ஞானம் நீங்கி, அறிவு பெருகியதே மூலகாரணம். தங்கத் தமிழிசையும், சார்ந்த உயர் நாடகமும், பொங்கி வளர்கின்ற பேச்சுக் கலையும், முன்னர் எடுத்துக் கூறிய சிற்பக்கலையும், சினிமாவுங் கூடச் சிறந்த; கலைகளாக மிளிர்வதை, நாம் கண்கள் ஊடாகக் காண்கின்றோம்.

இன்று ஊடகங்கள் பல. பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி மற்றும் தொலைபேசி இன்னபல ஊடகங்கள் எல்லாம் கலை வளர்க்கும் சாதனங்கள் அன்றோ!

இந்த வகையில் இதுவரை, எடுத்துக் காட்டிய விடயதானங்களை நோக்கும் பொழுது கலை என்றால் என்ன? என்பதன் பொருளை (Subject) நாமெல்லாம் இனிது விளங்கிக் கொண்டோம்.

**கலை** என்பது இலக்கியத்தின் சுரங்கம். இலக்கியம் என்பது இலட்சியம். அதாவது குறிக்கோள். குறிக்கோள் இல்லாது, பண்டிதர்கள் அன்றிப் பாமரர்களும் வாழ்வதில்லை.

Life is Literature,
Literature is Life

எனவே, கலைகளை வளர்ப்போம். நாங்கள் இன்பக் கலைகளைக் காண்போம். வளர்க கலை! வளர்ப்போம் கலை!! வாழ்வெல்லாம் கலை வாழ்க!!!.

## எழுத்தை உருப்போடுதல் வீண்

மகான்கள் இராமாயணத்தை இரண்டு எழுத்துகளில் முடித்து விட்டார்கள். ரிஷிகளோ வேதங்களை ஒரே எழுத்தில் அடக்கி விட்டார்கள். "எழுத்தறிவு பெறும் ஆசை உன்னை விடவில்லையென்றால் 'ஓம்'கார ஜெபம் செய் போதும் இது போதது என்றால் சின்னஞ் சிறியதான 'மாண்டூக்கிய உபநிஷத'த்தைப் படி அதன் பிறகும் ஆசை தீராவிடின் பத்து உபநிஷதங்களைப் பார்", என்ற கருத்துள்ள வாக்கியமொன்று "முக்தி கோப நிஷத"த்தில் வந்திருக்கிறது. அதனால் ரிஷியின் நோக்கம் என்னவென்று தெளிவாய்ப் புலனாகிறது. ஆனால் ஒரு எழுத்தையேனும் ஜெபம் செய்தே ஆகவேண்டும் என்று ரிஷி கூறவில்லை. ஒரு எழுத்தையோ, பல எழுத்துக்களையோ திரும்பத் திரும்பச் சொல்வதில் வாழ்க்கையின் நோக்கம் ஈடேறுவதில்லை.

*- கல்விச்சிந்தனைகள் நூலில் விநோபா -*

# What is Art

The Exhation of the Mans ability is Art. Art is Called by different words such as beauty, Pretty and Colour.

Ancient man and in his leisure time, reflecting his feeling. The music arose from his heart feeling. This is also an Art. He drew Art on the sand. He drew colourfull peacock and beautiful deer. In due course, he drew Art in the rocks with green leaves.

In this way, Music and Art were developed. Those who drew Art having found the rocks and made Sculpture. The Sculpture has been developed in this way.

While; Music, Art and Sculpture has been developing, due to the thinking Power of man, He entered the era of Science. The effects of this is numerous. The Science had taken the place of Art and strage inventions spread everywhere.

Today the world is Art. The Art is everwhere. We know it in sweety mordern system. The main course the developed of know ledge of the people growth of Science.

We can see through our eyes that the golden Music of Tamil, high standard of Drama, over growing oratory, the sculplure, denoted before and cinema are also fine Art.

There are several meadias today. Those are News papers, Radio, Telephone, Television, Internet, E-mail and Computers. The above said medias do develope the Art.

We now understood what is Art, by the above given facts. The Art is the min of the Literature. Literature is an Aim. Nobody can live, including pardits and illiterates without an Aim. "Life is literature, Literature is life". So we would make persiverance to promote the Art. We would find Happy Art. Let the Art develop. We do develope Art and wish the Art to develope through our whole Life.

# ஆசைகள் அகற்றிடும் ஆத்மீகம்

(ஆன்மீக வாரத்தை ஒட்டிய கவிதை)

நாடு நலம்பெற நாடுவோம் சட்டங்கள்
வீடு வளம்பெற போடுவோம் வேலிகள்
கூடு விடுதலை காணுதல் வேண்டின்
தேடுதல் வேண்டும் நல்ஆன்மீகச் சிந்தனை.

ஆன்மீக வாரத்தில் ஆகும்நல் எண்ணங்கள்
தான்நினைத் துள்ளத்தில் தாங்குதல் போதுமா?
வானமும் மண்ணுமாய் வாழ்இறை நல்லருள்
ஊன்உடல் போக்கியே உய்யநாம் நாடுவோம்.

கடவுள் அனைத்தும் கடந்தவர் அன்றோ!
மடைகள் திறந்திட வந்திடும் வெள்ளமாய்
அடிக்கடி எம்மனம் தாம்கொளும் ஆசைகள்
துடைத்திடக் கொள்ளுவோம் தூயநல் ஆன்மீகம்.

தெய்நல் வாழ்வினைத் தேடிய நால்வரும்
உய்யும் வழியென ஓதினர் ஆன்மீகம்
சைவ நெறிவந்த சான்றோர்கள் மட்டுமா?
மையல்கள் தீர மதம்பிறர் தோற்றினர்.

"சுவாமிவிவே கானந்தர்" சொல்வழி காப்போம்
அவாவிநிற் போமவர் ஆன்மீகப் பாதை
விவேக முடையவர் மேவுவர் அவ்வழி
விவேக மிலாதோர் கூட விரும்பட்டும்.

வாழ்கதினம் ஆன்மீகம் வாய்ப்புவரும் மக்கட்கு
சூழ்க சுடரொளி தொல்வினை போகட்டும்
மாள்க இனியுள தீயவை யாவுமே
வாழநாம் காப்போம் வளமாய் இறைநெறி.

"வலம்புரி"
19.01.2002

**06.10.2001 அன்று நடைபெற்ற**
**யாழ் பல்கலைக் கழகப் பொதுப் பட்டமளிப்பு விழாவில்**
**"முதுகலைமாணி" பட்டம் பெற்ற**
**அருட்கவி சீ. விநாசித்தம்பி ஐயா அவர்கட்கு**

# நல்வாழ்த்துக் கவிதைப் பூக்கள்

இந்து சமயத்தின் பேரவையின் நற்தலைவ!
முந்துபுகழ்ச் சேவைகளை முன்னின்று செய்கின்ற
ஆற்றல்களை நல்லறிவை ஆர்தான் மறுப்பார்கள்
தோற்றம் இறையருளால் சொக்கிக்கும் மற்றவர்க்கு
செந்தமிழில் ஆர்வம் சீர்சைவம் மேலோங்க
வந்தனையே ஐயாஉன் விழுமியங்கள் மேலன்றோ!
காக்கும் கடவுள் கருணை முகில்வண்ணன்
போக்கத் துயரெமக்கு என்றெண்ணி ஆங்கவர்க்கு
நாரா யணன்தேவ ஸ்தானம் எழுப்பவே
தாராளம்செய்தாய் தயங்காது சேவைகளை
செய்திட்ட சீர்சேவை மட்டுமா? மேன்மேலும்
உய்ய மனுக்குலத்தார் ஓங்குபெரு வாழ்வெய்த
கட்டிஅதைக் காக்கின்ற நற்கடமை யார்புகழார்
திட்டம்நின் சேவைகட்கு சேர்ப்பார் சிவபெருமான்
மட்டற்ற நற்சுகங்கள் வாழ்கநீ நீண்டநாள்
எட்டுத்திக் கெங்கும் எந்நாளும் உன்புகழை
செந்தமிழ் நல்லுலகம் செப்பும் அதுஉண்மை
தந்தேன்-என் நல்வாழ்த்து நன்று.

# துர்க்கா துரந்தரி,
# கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி
# அவர்களின் அறக்கொடைநாளொட்டிய
# நல்வாழ்த்துப் பாமலர்

"காமர்நெடுங் காட்டினிலே காணுமொரு மாபுதினம்
மாமரை கள்ஒலி கேட்டினிதாய்த் தாமரைகள்",
என்ற இலக்கணத் தின்இலக்காய் தானினிது
நின்றுவளர் நேரிழையார் நீண்டபுகழ் பெற்றுள்ளார்
செல்வி கலாநிதி சீர்சேரும் **தங்கம்மா**
வல்ல பிறவியவர் வாய்த்த வளத்தாலே
நல்லவையே செய்திட்டார் செய்கின்றார் செய்திடுவார்
எல்லாம் இவையெடுத்துப் பேசல் எளிதில்லை
**சக்தி**யின்றேல் வல்ல**சிவன்** தானில்லை என்பதனால்
முக்கோணச் சக்தி முதற்சக்தி துர்க்கையன்றோ!
**துர்க்கைஅம்மன்** கோவிலிலே தூயபணி தான்தொடர்ந்தீர
சர்க்கரையாய்க் கற்கண்டாய் சாலவுமே நற்பணிகள்
வைத்தபல சேவைகளா**ய்** மேலோங்கி நிற்கின்ற
உத்தமநல் மங்கையர்கள் மட்டுமா? இல்லையில்லை
எத்தனையோ நல்லிதயச் சுத்த அநாதைகள்
அத்தகையோர் காத்தாய் அருஞ்செல்வி வாழிய!நீ
**துர்க்கா** புரம்பேரில் **துர்க்கா துரந்தரியாய்**
நிற்க வழிகிடைத்த **நீளிறைவன்** தாளிணைகள்
வேண்டி வணங்கியென்றும் மேல்சேவை நீர்தொடர
யாண்டும்நல் **வாழ்த்து**! வளம்என்றும் வாழியவே!!
**வாழ்க**!!! நெடுநாள் மகிழ்ந்து.

# உழவுத் தொழில்

"சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம்; அதனால்
உழந்தும் உழவே தலை"

என்பது திருக்குறள். "உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம், வீணில் உண்டு களித்திருப்போரை நிந்தனை செய்வோம்", எனப் பாடினான் பாட்டுக்கு ஒரு புலவன் பாரதி.. இத்தகைய மனித வாழ்வுக்கு இன்றியமையாமையாக உள்ள உழவுத் தொழிலை, உயர்ந்த தொழிலாகவே நாம் கொள்ளல் வேண்டும். மனிதனுடைய அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, உறையுள் அதாவது வீடு ஆகிய மூன்றினுள்ளும் முதன்மை பெறுவது உணவு அன்றோ! எங்கள் நாட்டினரின் பிரதான உணவு நெல்லரிசிச் சோறு ஆகும். உழவுத் தொழிலால் பெறுவது நெல் ஆகும். எல்லாத் தொழிலிலும் மேன்மை மிக்க தொழில் உழவுத் தொழில் ஆகும். இதனையே எம்தமிழ் மூதாட்டியாரான ஔவையார்,

"உழுதுண்டு வாழ்வதற் கொப்பில்லைக் கண்டீர்
பழுதுண்டு வேறோர் பணிக்கு" எனப் பாடியுள்ளார்.

உழவுத்தொழிலை மேற்கொள்பவன் உழவன். அவன் எக்காரியத்தையும் சுபதினத்திலேயே செய்யத் தொடங்குவான். நிலத்தை உழுது பண்படுத்த ஆரம்பிக்கும் பொழுதும், நெல் விதைக்கும் பொழுதும், அறுவடை ஆரம்பித்தல், சூடடித்தல் ஆகிய எக்காரியத்துக்கும் 'நாள்', பார்த்து அதாவது சுபநாள் தேடியே காரியம் ஆற்றுபவர் உழவர். நெற்செய்கையோடு தோட்ட விவசாயம், கால்நடை வளர்த்தல் என்பவற்றிலும் உழவர் செயற்படுவர்.

நெற்செய்கைக்கு அதிக முயற்சி வேண்டும். வயலை நன்றாக உழுதல், போதிய பசளை இடுதல், களைபிடுங்கல் உரிய காலத்தில் அறுவடை செய்தல் போன்றன உழவனின் பெருமுயற்சியால் மேற்கொள்ளப்படுகின்றன.

இக்காலத்தில் பலபுதிய விஞ்ஞான முறைகளை உழவன் விவசாயத்தில் கையாளுகின்றான். விவசாய விரிவாக்க நிலையம்,

கமத்தொழில் திணைக்களம் ஆகியன உழவர்களுக்கு பயற்சிகளையும், விரிவுரைகளையும் வழங்குகின்றன. நிவாரண விலையில், புதிய விதமான இரசாயன உரங்களையும், பூச்சிகொல்லி மருந்துகளையும் பெற்றுக் கொள்ளலாம். நீரப்பாசன இயந்திரங்களும், தெளிகருவிகளும் பயன்படுத்தப்படுகின்றன. இதன்மூலம் உற்பத்தி அதிகரிக்கின்றது.

"அதிக உணவு பயிரிடுக", என்னும் சுலோகம் கவனிக்கப்படுகின்றது. நெற்றிவியர்வை நிலத்தில் சிந்த உழைக்கும் உழவன் உண்மையிலேயே ஒரு ஆக்கபூர்வமான தொழிலையே செய்கின்றான். யாருக்கும் பயப்படாது மேலதிகாரிகள் யாருமின்றி மேற்கொள்ளப்பெறும் உழவுத் தொழில் ஒரு புனிதமான தொழில் என்பது "உள்ளங்கை நெல்லிக்கனி அன்றோ"!

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்" என்றார் மானிடவியல் வாழ்வுக்கு வழிகாட்டிய வள்ளுவனார்.

உழவுத் தொழிலைச் செய்யும் உழவன் உலகின் "முதுகெலும்பு" என்றால் அது மிகையாகாது. இன்று உலகில் நவீன தொழில்நுட்பம் பெருகியதால், ஒவ்வொரு நாட்டிலும் தொழில்கள் பல உள்ளன. ஒவ்வொரு தனிமனிதனும் தொழில் செய்வது தன்தனது வாழ்க்கையைச் சீர்செய்யவே. ஆனால் உழவுத் தொழில் செய்யும் உழவனோ இதிலிருந்து வேறுபடுகின்றான். செல்வம் பெருக்குதலே நோக்கமாக கொள்ளாமல் சேவை மனப்பான்மையோடு செயற்படுகின்றான். தனக்கு மட்டுமன்றிப் பிறர்க்கும் உதவுகின்றான். எல்லா மக்களும் உண்டு உயிர்வாழ உதவுகின்றான். எனவே உழவுத் தொழில் புனிதத் தொழில். போற்றிடுவோம்.

**"உழவுக்கும் தொழிலுக்கும்**
**வந்தனை செய்வோம்"**

*- பாரதியார் -*

**பேரறிஞர் க. சொக்கலிங்கம் (சொக்கன்)**
**அவர்கட்கு யாழ் பல்கலைக் கழகம்**
**"கலாநிதி" பட்டம் அளித்தமைக்கு**
**வாழ்த்து**

## மனக்குறை தீர்ந்தது
## என்றும் வளம் பெறுக

"சொக்கன்" அவர்கட்குக் கச்சாயூர்க் கல்வியினர்
மிக்க பெருமகிழ்வில் மேலான நல்வாழ்த்து
பல்கலையாழ் நற்கழகம் பல்லாண்டின் பின்னுங்கள்
கல்வி அறிவுணர்ந்து தந்த "கலாநிதி"
நற்பட்டம் பெற்றமைக்குத் தந்திட்டோம் ஏற்றிடுக
மற்றுங்கள் மட்டற்ற மன்னும் பெருஞ்சேவை
சற்றுங் குறையாது சால மிளிர்கவே!
உற்ற உடல்உள நற்பலத்தை நல்லூரான்
பெற்றுத் தருவான் பெயரோங்கும் பேறேதான்
சுற்றத்தார் மற்றுங்கள் அன்புக் குரியவர்கள்
எல்லோரும் வாழ்க இனிது

யாழ். திருநாவுக்கரசு மகா வித்தியாலய உபஅதிபர்

## திரு. சிதம்பரப்பிள்ளை குலசேகரம்
## அவர்களின் சேவைநலன் பாராட்டும் பிரிவுபசாரமும்

ஓய்வு பெற்ற நாள் 03.09.2000.

செல்லமுத்துவின் சீரார் சிதம்பரப் பிள்ளையர்தம்
நல்லறத்தால் எம்குலமே! திரு நாயகன்
கச்சாயூர் கண்ட ஒருதவப் புத்திரனே!
இச்செகத்தில் 03.09.1940 லே முன்பிறந்தாய்
கல்வி கணக்காகப் பெற்றினிது கண்டதனால்
எல்லவரும் போற்றும் இனியஓர் ஆசானாய்
ஆகி நுவறரஸ்பத்தை ஆனநல் பள்ளியிலே
தேக சுகத்தோடு சேவைதினம் செய்கையிலே
வாழ்க்கை வளம்பெறவே வாய்த்த துணையாள்தான்
**வேலுப்பிள் ளைநாகம்மா** வேண்டிவரத் தால்பெற்ற
சீலம் நிறைக**மலா** சேர்ந்தாள் துணையாக
காலம் துணைகொடுக்க கண்டார்நற் பிள்ளைகளை
முன்னவன் **நற்குணாளன்** முந்துசிறைக் காவலன்தான்
பின்னர் **பிரேமநற் காந்தனவன்** லண்டனிலே
**கெங்காதரன்** மற்றவனோ வர்த்தக நற்பிரிவில்
பொங்குபுகழ் யாழ் பல்கலைக்கழகம் சேர்ந்திட்டான்
குலமகளாய் பெற்றதிருச் செல்வி **ஜெயந்தினி** யாள்
வலம்வந்து நிற்கின்றாள் வர்த்தக நற்துறையில்
பட்டம் அவள்பெறுவாள் பாரெல்லாம் போற்றிடுமே
எட்டா தெவர்க்கும் இவ்வினிய நல்வாழ்வு
எங்கள் குலப்பண்பு ஏற்றிமிகப் போற்றிடலாம்
தங்கக் குணமுடையோன் கண்டிப்பு நற்சுபாவம்
நெஞ்சம் பயப்படான் நேர்கொள்வான் எவ்வெவையும்
அஞ்சான் உடலலுப்பை ஆழ்ந்தநல் நம்பிக்கை
அத்தோடு விசுவாசம் அதிபர்மேல் மட்டுமன்றி
முத்தான மாணவர்மேல் மொத்தம்சக தோழர்மேல்
வைபவங்கள் நிகழ்வுகளில் வண்ணம் அவன்திறமை
செய்கையில் ஓர்விளை யாட்டு மாவீரன்
ஐயனிவன் நடையுடை பாவனைகள் நல்லவையே
மெய்யாகப் போற்றுகின்றோம் மேல்சேவை யாவையுமே
வாழ்க குலமனையாள் மக்களொடு மற்றுறவோர்
வாழ்க நெடுநாள் மகிழ்ந்து.

**யா/ தி.ம.வி. அதிபர்**

**உடன் ஆசிரியர், மாணவர், பெற்றோர்.**

# தற்குறிப்பு ஏற்ற அணி

அணி என்பது அணியப் பெறுபவை. அவை ஒழுங்கு மற்றும் அழகு தருபவை. 'அணிநடை' என்பதில் ஒழுங்கு மிக மிகத் தேவை. அது மிக முக்கியத்துவம் வாய்ந்தது. இங்கே தரப்பட்ட தலைப்பு தற்குறிப்பு ஏற்ற அணி. இது கவிஞன் அல்லது புலமை மிக்க புலவன் ஒருவன் தன் பாடலில், அப்பாடலினை ஆக்கும் பொழுது இயற்கையாக நடைபெறுகின்ற ஒரு செயற்பாட்டினை, சந்தர்ப்ப சூழ்நிலைக்கேற்ப தன் கவிதைகளில் ஏற்றி உயர்ச்சி பெறச் செய்கின்றான், தற்குறிப்பு ஏற்றம் அதாவது தன் குறிப்பை நிகழ்கின்ற செயற்பாட்டில் சங்கமிக்க விட்டுவிடுதல்.

இந்தத் தற்குறிப்பு ஏற்ற அணிக்குப் பரந்து விரிந்த தமிழ் இலக்கியத்தில் - அது சங்க இலக்கியமாயினும், பிற்கால ஏன்? இருபதாம் நூற்றாண்டு இலக்கியங்களில் சரி, இன்றைய இருபத்தோராம் நூற்றாண்டு இலக்கியத்திலும் பக்தி இலக்கியங்களில் கூடப் பரிணமிப்பதைக் கற்றறி ந்தோர் மட்டுமன்றி மற்ரெவரும் காணலாம்.

இலியட், ஒடிசி ஆகிய இரண்டு கிரேக்க நாட்டுக் காவியங்கள் போல எம்மினிய தமிழ்மொழியில் எழுந்த இரு காவியங்கள் தாம் இராமாயணமும், பாரதமும் ஆகும். இராமாயண காவியத்தில் அயோத்தியா காண்டத்தில் வரும் மிதிலைக் காட்சிப் படலத்தில், இராமனையும் இளவல் இலட்சுமணனையும், தாடகை வதத்தின் பின் கூட்டிச் செல்லும் விசுவாமித்திர முனிவர் மிதிலை மாநகரை அணுகுகின்றார்.அந் நகரின் மாளிகையில் மேல் உயரத்தில் பறக்கின்ற கொடி இயற்கைக் காற்றால் அசைகின்றது- அந்தக் குறிப்பை எவ்வளவு அழகாகக் கவிச்சக்கரவர்த்தி கம்பர் படம் பிடிக்கின்றார்.

மையறு மலரி னீங்கி யான்செய்மா தவத்தின் வந்து
செய்யவ ளிருந்தா ளென்று செழுமணிக் கொடிக ளென்னும்
கைகளை நீட்டி யந்தக் கடிநகர் கமலச் செங்கண்
ஐயனை யொல்லை வாவென் றழைப்பது போன்ற தம்மா!

இங்கே திருப்பாற்கடலில் திருமாலுடன் பள்ளிகொள்ளும் மகாலட்சுமி தமது ஆசனமாகிய செந்தாமரை மலரின் நீங்கிய செய்யவள் இங்கே இருக்கின்றாள் அதாவது சீதாதேவி இங்கே

இருக்கின்றாள். இலக்குமிதேவி புதிய அவதாரமாகி ஜனகன் புத்திரியாக - வீதியில் வருகின்ற காத்தற் கடவுள் கருணை முகில்வண்ணன் மகாவிஷ்ணுவின் அவதார புருஷன் இராமன் அவன்தன்னை இங்கே உன்தேவி இலட்சுமி பிராட்டியின் அவதாரம் சீதாதேவி இருக்கின்றாள் "விரைந்து வா" என்று இராமபிரானை அழைப்பது போன்று மிதிலை மாநகரக் கோட்டையை அணிசெய்யும் கொடிகள் ஆகிய கைகளை நீட்டி மிக்க காவலையுடைய மிதிலைமா நகரம் அழைக்கின்றது. இது ஒரு சிறந்த தற்குறிப்பு ஏற்ற அணியன்றோ!

இனிப் பாரத காவியத்தில் கண்ணபெருமானைத் தன் பக்கம் இணைக்கத் தூதுவனை அனுப்புகின்றான் துரியோதனன். தூதுவன் குதிரைமேல் பாசறை நோக்கிச் செல்லும் வேளை பாசறை முகவாயிலில் உள்ள பதாத ஆடை இயற்கைக் காற்றால் அசைகின்றன. தமிழில் பாரத காவியம் படைத்த நூலாசிரியர் வில்லிபுத்தூரர் இதனைத் தற்குறிப்பேற்றம் செய்கின்றார்.

"ஈண்டுநீ வரினு மெங்கள் எழிலுடை எழிலி வண்ணன்
பாண்டவர்க் காக வல்லால் பழுதுடை உனக்காக என்று
காண்டகு பதாத ஆடை கைகளால் தடுப்ப போன்ற"

என அழகாகப் பாப்புனைகின்றார். கொடிகள் ஆகிய கைகளை நீட்டி அங்கே மிதிலை மாநகரம் அழைக்கின்றது. இங்கே பதாத ஆடை தடுக்கின்றது.

இனி அயோத்தியா காண்டம் கைகேயி சூழ்வினைப் படலத்தில் இராமாயண காவியம் படம் பிடிக்கும் மற்றொரு தற்குறிப்பு ஏற்ற அணியை நோக்குவோம். ஒரு வரத்தால் பரதன் நாடாளவும், மறுவரத்தால் இராமன் காடாளவும் தசரதச் சக்கர வர்த்தியிடம் இளைய மனையாள் கைகேயி வரம் கேட்கின்றாள். தசரதன் என்ன கூறுகின்றான்.

"கண்ணே வேண்டு மெனினும் ஈயக் கடவேன்என்
உள்ணோர்ஆவி வேண்டு மெனினும் இன்றே உனதன்றோ!
பெண்ணே வண்ணக் கேகயன் மானே! பெறுவாயேல்
மண்ணே கொள்நீ மற்றய தொன்றும் மறவென்றான்.
எனச் சாற்றி இன்னும்,
நின்மகன் ஆள்வான் நீயினி தாள்வாய் நிலமெல்லாம்
உன்வய மாமே ஆளுதி தந்தேன் உரைகுன்றேன்
என்மகன் என்கண் என்னுயிர் எல்லா வுயிர்கட்கும்
நன்மகன் இந்த நாடிற வாமை நயவென்றான்"

தீய மந்தரை - கூனியின் போதனையால் தூய சிந்தை திரிந்த கைகேயியோ விட்டபாடில்லை. இந் நிகழ்வை தற்குறிப்பேற்றம் செய்யும்கவிச்சக்கரவர்த்தி கம்பர்.

"எண்டருங்கடை சென்ற யாமம் இயம்பு கின்றன வேளையால்
வண்டுதங்கிய தொங்கன் மார்பன் மயங்கி விம்மிய வாறெலாம்
கண்டுதம்சிற காகிய கைக ளால்வயி யெற்றி யெற்றி

எனப்பாடுகின்றார். இங்கே சாமக் கோழிகள் இயற்கையாகக் கூவுவதைத்தான் கம்பனாழ்வார் காட்டுகின்றார். இவைபோற் பற்பல தற்குறிப்பெற்ற அணிகளை அவர் காட்டுகின்றார்.

இதே சாமக் கோழிகளை, வெண்பாவிற் புகழேந்தியார் நளவெண்பா நூலில், நடுக்காட்டில் நடுச்சாமம் அண்டிய வேளையில் , ...................

"ஒன்றுறைத் துகிலும் உயிரும் இரண்டாகப்
பற்றி அரிந்தான் அரிந்திட் டவள்நிலைமை
தெரிந்தான் இருந்தான் திகைத்து"

என்ற நிலையிலும் நளன் தன்னினிய துணையாள் தமயந்தியை விட்டுப் பிரிகின்றான். இந்த நிகழ்ச்சியைத் தற்குறிப்பேற்றம் செய்யும் புகழேந்தியார்

'தையல் துயர்க்குத் தரியாது தம்சிறகாம்
கையால் வயிறலைத்துக் காரிருள்வாய் - வெய்யோனை
வாவுபரித் தேரேறி வாவென் றழைப்பனபோல்
கூவினவே கோழிக் குலம்"

என எவ்வளவு சிறப்பாக இலக்கியமாக்குகின்றார்.

கவிச்சக்கரவர்த்தி கம்பருக்குப் பின்வந்து வரம் பெற்ற மகாகவி பாரதியார், பாரதிதாசன், கவிச்சக்கரவர்த்தி கண்ணதாசன், பட்டுக்கோட்டையார் இன்னபல புலவர்களும் கவிஞர்களும் காட்டிய தற்குறிப்பேற்ற அணிகளை எடுத்து விளக்கின் இக்கட்டுரை மேலும் நீண்ட விடயதானமாகிவிடும்.

நிறைவாக தமது சிறப்பு நூல்கள் ஐந்தினை யாத்து ஒரேநாளில் 30. 11. 2002 வெளியீட்டு விழாவினைக் காணவுள்ள கச்சாயூர் பண்டிதர், கவிஞர் "சுகசீவன்", அவர்களின் "அறிவுக்கதம்ப மாலை", நூலில் இடம்பெற்ற "காலைக்காட்சி" என்ற கவிதையில் அவர்,

"இருள்கரைத் துலகின் இயற்கைப் பொருளெலாம்
தெளிவுறச் செய்யும் எழுமாத் தேரோன்
தன்னையும் இருளெனக் கரைப்பா னென்றே
தன்சிற கடித்துக் காக்கையும் கரையும்"

என்ற ஆசிரியப்பாவால் தற்குறிப்பேற்ற அணியின் விந்தைதனை வியந்துரைகின்றார். காகம் கரைவது அதிகாலை நிகழ்வில் ஒன்று. அதன் வேளை தன்னையும் இருள் எனக் கரைத்து அகற்றிவிடுவானோ! சூரிய பகவான் என்றஞ்சும் காக்கையின் கரைவுதனை எவ்வளவு அழகாகச் சிறப்பாகத் தற்குறிப்பேற்றம் செய்கின்றார் "சுகசீவன்".

அணி இலக்கணமாகிய செய்யுள் இலக்கணத்தில் ஒன்றாகிய தற்குறிப்பேற்ற அணியின் சில எடுத்துக்காட்டுகளை இதுவரை கண்டோம். இன்னும் இன்னும் எதிர்காலத்திலும் ஏற்றம் பெறும் தற்குறிப்பு ஏற்ற அணி செய்யுள் அணிகளுள் மிகவும் சிறப்புடையது என்பதைக் கற்று அறிந்தோர் மட்டுமன்றி மற்றெவரும் மறுப்பதற்கு இல்லை.

## சொந்தம் தொடர்க சுகம்

கொடிகாமம் பேரூர் கொடிகட்டி வாழ்ந்த
அடிமட்டம் தேய்ந்துள்ள இவ்வேளை ஆயிடினும்
ஊடகங்கள் ஓங்குவகை உய்விக்கும் இத்தருணம்
வீட்டில் வெளியில் வரும்வழியில் சிக்கலிலும்
நாடி அருஞ்சேவை நம்மக்கள் தாம்பெறவே
கூடிநிற்கும் அஞ்சல் அலுவலக ஊழியர்கள்
தம்மை இனிதுகண்டு தக்க மகிழ்வுகொண்டேன்
எம்மைத் தமிழினத்தை ஏலுமள(வு) ஏற்றிடுங்கள்
சொந்தம் தொடர்க சுகம்.

(இடப்பெயர்வில் கரவெட்டியில் இயங்கிவந்த கொடிகாமம் தபாலகம் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்படுவதற்கு நான்கு மாதங்களுக்கு முன்னரே மீண்டும் பழைய கட்டிடத்தில் செயற்படத் தொடங்கிய அன்று பாடிய பாடல்)

# நேரு மாமா

1. நேரு மாமா நல்லவர்
நேசம் எம்மேல் உள்ளவர்
பார தத்தின் பிரதமர்
பாரில் பலர் காவலர்.

2. உரோசா மலர் மீதிலே
உள்ளம் பறி கொடுப்பவர்
இராசா வாக வாழ்ந்தவர்
இந்தி ராவின் தந்தையார்.

3. பிரத மராய் இருக்கையில்
பெரிய பிரச்ச னைகளைத்
துரித மாகத் துணிவுடன்
துடைத் தெறிந்து நீக்கினார்.

4. ஏழை பணக் காரர்கள்
என்ற நிலை நீங்கவே
வாழும் வகை காட்டினார்
வையம் நன்கு வாழ்ந்தது

5. வீட்டைப் பள்ளி யாக்கி
மேவுங் கல்வி பெற்றிடக்
காட்டி யவர் தாய்தந்தை
கண்டார் இலண்டன் மேல்கல்வி

6. நேருவைப் போல் நல்லதொரு
நேச மாமா கிடைப்பாரா!
பாரில் அவர் பெயர்தினம்
பரவி வாழ்க!! வாழ்கவே!!!

# விண்ணில் பறக்கும் பட்டம்

1. பட்டம் பட்டம் பட்டம்
பாரில் நின்றே பட்டம்
பட்டம் விடுவோம் நன்கு
பறக்கும் விண்ணில் பட்டம்

2. நூலைக் கையால் விடுவோம்
நொடியில் எழும்பும் பட்டம்
வாலோ குறையில் பட்டம்
வளமாய் ஏறா மேலே

3. தோழர் நாங்கள் கூடித்
தூர வெளியில் போயே
ஆரா ஆசை கொண்டு
அவிழ்ப்போம் நூலாம் பந்தை

4. ஏறுது ஏறுது பட்டம்
இதயம் மகிழ்விற் துள்ளும்
ஏனோ! எம்மை மறந்து
எடுப்போம் பலமணி நேரம்

5. வீடு வந்தால் அம்மா
மேலும் அப்பா கூட
பேசி நிற்பர் பெரிதாய்
பெயர்த்தும் புத்தி சொல்வார்

6. "வாசி பாடம் நன்கு
வளமாய் அறிவைத் தேடு"
ஓதி நிற்பர் நன்கு
உணர்வோம் உண்மை உண்மை

# காலமெல்லாம் வாழ்க "வலம்புரியே"

ஆண்டு இரண்டு அகவையாய் வைத்திட்ட
நீண்ட பெருஞ்சேவை நேர்தமிழுக் கானதுவே
ஈண்டு உனைப்போற்றி நிற்கின்ற கல்வியின்
காண்கின்றோம் காலமெல்லாம் வாழ்க! "வலம்புரியே"
நேர்சேவை செந்தமிழர் வாழ்வுயரச் சாதிமதப்
பேரெதுவும் இல்லாப் பெருஞ்சேவை போற்றிடுவோம்
எம்தமிழ ரின்கடமை யார்மறுப்பார் ஆமுண்மை
நம்மவர்க்குச் சால அரசியல் அத்தோடு
வாழ்வின் இலட்சியம் தான் இலக்கென்றென்றும்
சூழ அருஞ்சேவை சோதியதாய்த் தான்தருவாய்
"இன்று ஒருதகவல்" ஏத்தும் அருங்கருத்து
நன்று நயம்மிக்க நல்ல இலக்கியம்தான்
இன்னும் பழையவனின் பாங்காம் கவிதையொடு
மன்னும் புவிவாழ் இளங்கவிஞர் பாடல்களும்
கட்டுரைகள் ஆய்வுரைகள் மற்று எவையெல்லாம்
பிச்சை தனைவாங்கும் பேர்உனக்கு வாய்த்ததுவே
இச்செகத்தில் என்றும் "வலம்புரி"யே! வாழியநீ!!
மெச்சும் புகழ் மேன்மையொடு.!!!

***வலம்புரி 2ம் ஆண்டு நிறைவு***
***இதழில் வெளிவந்த கவிதை***

# குடும்பத்தில் பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள்

சிவனும் சக்தியும் இணைந்தது எங்கள் கண்கூடு "சிவம் இன்றேல் சக்தி இல்லை; சக்தி இன்றேல் சிவம் இல்லை" நாமறிவோம். ஒரு குடும்பம் என்பதில் . தலைவன், தலைவி இருவர். இவர்கள் தரும் எச்சங்கள் தான் மக்கள். ஆணோ? பெண்ணோ? என்பது பிரச்சினையில்லை.

வீட்டுக்குள் பெண்ணைப் பூட்டிவைத்தோர் தலைகவிழ்ந்தார்; அன்னவர்க்குச் "சாவுமணி நாம் மகளிர் அடித்திடுவோம். ஆடவரும் பெண் இனமும் அன்புலகில் சரிநிகரே". எனவே பெண் இனத்தை அடக்கி ஆளும் ஆண்கள், சரிநிகர் உணர வேண்டும்.

"ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே
சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே"

என்பதை எம்சமூகம் உணர்தல் மிக அவசியம். எனவே பிறக்கும் ஒவ்வொரு குழந்தையின் எதிர்கால நல்வாழ்வு தாய்க்கும் தந்தைக்கும் சமபங்கு ஆக வேண்டும். இந்த மணிக்கருத்தை எம் தமிழர் காத்துவரின் பெண்களுக்கு ஏன் பிரச்சினை.

இன்று பொருளாதாரப் பிரச்சினை என்பதால் குடும்பத் தலைவனும், குடும்பத் தலைவியும் வேலை செய்ய நேரிடுகின்றது. இதனால் தான் பெண்கள் குடும்பத்தில் பிரச்சினைகளை ஏதிர்கொள்ள நேரிடுகின்றது. பாவம் இத்தலைவிகள் அதி காலை மணி மூன்று அன்றேல் மூன்று அரைக்கு எழுந்து தலைவி உழைப்பு. இன்னும் சில குடும்பத் தலைவர்கள் மனைவி மக்கள் நலம் பாரார் - நாடுவது பீடி, சிகரட், கள்ளு, சாராயம் எப்படி உருப்படும் குடும்பம். இதுவே குடும்பத்தில் பெண்கள் எதிர்கொள்ளும் பெரும் பிரச்சினை.

இதற்கு விடிவு ஆடவர் திருந்தட்டும். ஆகும் நல்வாழ்வு. அதன் பின் அன்னையர் அவலம் தீரும். அதுவே வேண்டப்படுவது. "ஆகட்டும் பார்ப்போம்" கர்மவீரர் காமராஜர் கூற்று இது. ஆண்டவன் அருள் வேண்டுவோம்.

"பெண் என்ன? அடிமையா?" தயது செய்து, அழகான ஆடவரே! கேளீர், நீர்

"கற்புநெறி என்றிட்டால் பெண்களுக்கு மட்டுமல்ல
உற்றது உங்களுக்கும்"

என்றான் பாரதி. எனவே பெண்ணினம் பெரிதும் வாழும். உதவுவோம் எம்மினிய பெண் சோதரிகளுக்கு.

**வாழ்க பெண்ணினம் – வாழ்க தாய்மை**

# பாடசாலை

1. பாட சாலை செல்வோம்நாம்
பாடம் நித்தம் படிப்போம்
தேடும் அறிவை எந்நாளும்
திருப்பித் திருப்பிப் பார்ப்போமே.

2. பாட்டை நித்தம் பாடிடுவோம்
பாப்பாக் கதையும் கேட்டிடுவோம்
நாட்டை நாமும் முன்னேற்ற
நாளும் கல்வி பெறுவோமே.

3. வீட்டில் பாடம் மீட்டிடுவோம்
வேண்டுங் கல்வி பெருக்கிடுவோம்
'வீரர்' என்று ஆசிரியர்
விரும்பிப் போற்றப் படிப்போமே.

4. ஒற்றுமை யாகத் தோழருடன்
உண்மைக் கல்வி கற்றிடுவோம்
பெற்ற தாயும் தந்தையரும்
பேண நாமும் வாழ்ந்திடுவோம்.

5. நாடு போற்றும் தொழிலினிலே
நாங்கள் இருக்கும் வேளையிலும்
பாட சாலைத் தாயவளைப்
பாரில் மறவோம் மறவோமே.

# மரபுக் கவிதை

விஞ்ஞானக் கல்வி மிகவளர்ந்து இன்றுலகில் அஞ்ஞானம் நீங்கி அறிவு பெருகியதால் எங்கும் கலைகள் இனிய புது முறையில், பொங்கிப் பெருகிப் பொலிகிறது இன்றன்றி என்றும் இது நிலைக்கும். இன்று "கலையுலகம்" நாட்டில் பலகலைகள் உண்டு. அவற்றுள் இசை, நாடகம், பேச்சு அதாவது சொற்பொழிவு, சிற்பக்கலை, சினிமாக்கலை என்பன போல் ஒன்றே கவிதைக்கலை.

இக்கவிதை சங்ககாலம் முதல் இரண்டாயிரம் ஆண்டுகள் மேலாக வரலாறு படைத்துள்ளது. காலத்துக்குக் காலம் பற்பல புலவர்கள் மரபுவழி நின்று பாடியுள்ளனர். சங்கப்பாடல்கள், வள்ளுவரும் பின்னால் முன்னால் என்று கம்பன் ஆழ்வார் புகழேந்தியார், பெண்பாற்புலவர்கள் குறிப்பாக ஔவையார் பலரும் மரபுவழி நின்று மரபுக் கவிதைகளைப் படைத்துள்ளனர்.

தற்கால வீரமணி ஐயர், அருட்கவி வினாசித்தம்பி ஐயா, நாடறிந்த நற்கவிஞர் முருகையன், கச்சாயூர்க் கவிஞர் பண்டிதர் சுகசீவன், கல்வயலூர்ப் புலவர் குமாரசாமி இன்னும் பலர் மரபு பேணியுள்ளனர்.மரபுக்கவிதைகள் எவ்வகையாலும் சிறப்புடையனவே.

எடுத்துக் கொண்ட பொருளை விட்டு இம்மியும் விலகாதவை அவை திருக்குறள், நாலடியார் மட்டுமன்றி, பக்தி இலக்கியங்கள் கூட மரபு வழியுள்ளன.

மரபுவழிப் பாடல்கள் இக்காலம் அரிதாகவே காணப் பெறுகின்றது.

புதுக்கவிதைகளின் வரவால் பலநூறு இளங்கவிஞர்கள் பத்திரிகை உலகத்தை மட்டுமன்றி வானொலி, தொலைக்காட்சி என்பன போன்ற ஊடகங்களால் வளம் பெறுகின்றனர்.

மரபைப் பேணுவோம் அதேவேளை ஒருவேளை (At the same time and at the nick of the time ) புதுக்கவிதைகளும் பொருள் உள்ளமையால் போற்றல் வாசக நேயர்கள் கடமை அன்றோ. மரபுக்கவிதைகள் மரபேதான். வளம் பெறட்டும் அவை. வாழ்க மரபு வழி சமைப்போம்.

# புதுக்கவிதை

இலக்கியப் பணியில் என்றும் உலகோங்கும் தலைமை இவற்றுள்ளே தன்னர் கவிக்குண்டு சங்கத்துச் செய்யுளொடு சார்ந்து பலவாண்டாய் எங்கும் கவிதைமலர் என்றும் மலர்கின்றது பொங்கும் கவிஞர்களோ புதிது பதிதாய் என்றும் எங்கெங்கோ இருந்து இனிய குரல் கொடுக்கின்றார் தங்கத் தமிழ்க் கவிதை தக்க கலையன்றோ! இந்த வகையில் இன்று பல இளங் கவிஞர்கள் இனிய படையல்களைப் படைக்கின்றார்.பத்திரிகைகள், வானொலி ஏன்? தொலைக்காட்சியிலுங் கூடக் குவிகின்றது புதுக் கவிதை. கவிதைக்குப் பொருள் மிக மிக முக்கியமானது. இங்கே மரபுக் கவிதை வழி எதுகை, மோனை பார்ப்பது இல்லை. இப் புதுக் கவிதைகள் நல்ல குறிரீடாக மிளிர்கின்றது.

ஈழத்துப் பிரபலமான பல முது கவிஞர்களும் கூட புதுக் கவிதை படைத்தனர். திரு. தா.இராமலிங்கம் புதுமெய்க்கவிதைகள் என்ற வரிசையில் இரு நூல்களை அச்சேற்றியுள்ளார். நாடு நன்கறியும் முதுபெருங் கவிஞர் முருகையன் மட்டுமன்றி அதே கல்வயலூர்ப் புலவர் வே.குமாரசாமி இன்னும் பலர் புதுக்கவிதைகள் செய்தனர். திரு.இராமுப்பிள்ளை, முருகையன் ஏன் புலவர் குமாரசாமியுங் கூட மரபு வழியிலும் பாடியுள்ளனர்.

புதுக்கவிதை என்ற கடிவாளம் கழற்றப்பட்ட குதிரைகளின் வரவால் வெற்று வசனங்கள் எல்லாம் கவிதை அந்தஸ்துக் கோரும் காலமிது என்றும்; கவிதை நயத்தோடு கருத்தாழம் மிக்க கவிதைகளைக் காணுதல் அரிதாகவே உள்ள நிலைமையில் கச்சாயூர்க் கவிஞர் பண்டிதர் "சுகசீவன்" அவர்கள் அண்மையில் ஒரே நாளில் 30.11.20011 அன்று வெளியிட்ட சிறப்பு நூல்கள் ஐந்துகளில் ஒன்றாகிய பாலர் பாமலர் 40 கவிதைப் பிரியர்களுக்கு ஆத்ம திருப்தியைத் தந்துள்ளது என்று ஒரு திறன் ஆய்வாளர் விமர்சித்துள்ளார். "புதியன புகுதலும் பழையன கழிதலும் வழுவல காலவகையினாலே" என்ற நன்னூலார் கோட்பாடும் இங்கு நோக்கற் பாலது எனவே புதுக் கவிதைகளும் வளரட்டும்.

# சேர்ந்து பாடுவோம்

1. என்ன என்ன தேவை என்று
எமக்குப் பாடல் சொல்வதால்
சின்னப் பாலர் நாங்கள் எல்லாம்
சேர்ந்து பாட்டுப் பாடுவோம்.

2. அப்பா அம்மா அன்பில் எமக்கு
அருமை யாகத் தருவதை
எப்போ தும்நாம் இன்ப மாக
ஏற்று மகிழ்வு காட்டுவோம்.

3. பாட சாலை தன்னில் நாங்கள்
படிப்போம் பாடம் விருப்புடன்
நாடி எங்கள் உபாத்தி யாயர்
நல்ல தென்று போற்றவே.

4. கூடிப் பாலர் நாங்கள் எல்லாம்
குதித்து ஒன்றாய் ஆடுவோம்
போட மாட்டோம் போட்டி என்றும்
புத்தி யோடு வாழுவோம்.

5. காந்தித் தாத்தா போல மற்றும்
கருணை மிக்க பெரியவர்
சாந்தி பற்றிச் சொன்ன வற்றைத்
தலையிற் போற்றி மதிப்போமே.

## யா/ ஆனைப்பந்தி மெ.மி வித்தியாலயத்தில் 06.10.2001ல் சிறப்பாக நடைபெற்ற "ஆசிரியதினத்தில்" நிகழ்த்திய சிறப்புரை

வணக்கம்,

"ஆசு இரிவோன் ஆசிரியன்". அதாவது ஆசு-குற்றம், மாணவர்தம் குற்றம் குறைகளை நீக்குபவனே ஆசிரியன். இதனை ஆசிரியப்பணி புரியும் ஒவ்வொருவர்தம் வாழ்விலும் அடிநாதமாக, மூலவேராக கொள்ளல் வேண்டும். பள்ளிபயில் மாணவர் எங்கள் உயிர்ச் சொத்து. அத்தகைய மேலான உடைமையைப் பேணிக் காத்தல் எம்மவர் பெருங்கடன், கடமையில் நல்லாசிரியர்கள் எப்பொழுதுங் கண்ணுங் கருத்துமாக இருப்பர். கல்வியெனும் செல்வம் அளிக்கின்ற காவலரே ஆசிரியர்கள். அக்காவலர் தம் காவலரே அதிபர். ஆக, அதிபர்தம் கடமையும் மகத்தானதே.

ஒரு காலத்தில் "களி மண்ணைக் கண்ணன் ஆக்கும் கலைஞனே ஆசிரியன்" என்றனர் அக்கால கல்வியாளர். கேட்கவும் எழுதவும் இனிமையாக இருக்கும் இக்கூற்று எழுத்து, சொல் பதங்களைத் தாண்டிப் பொருளில் பிழையான கருத்தினைக் கொண்டு வரலாயிற்று. களிமண் என்னும் பொழுது அது தரக்குறைவான பொருள், ஏதோ வெறுமைப்பொருள், ஒன்றும் தெரியாத ஒன்று என்ற கீழ்மட்டக் கருத்துக்களைத் தோற்றுவிக்கும் தன்மையையும் நாம் உணர முடிகிறது. ஒவ்வோர் மாணவர்தம் தனித்தனித் திறமைகளைக் கண்டு, ஆராய்ந்து அம்மாணவரின் உச்சத் திறமையைக் கண்டுபிடித்து, ஒரு மாணவனுடைய அல்லது மாணவியுடைய ஆற்றலுக்கு ஏற்ப அவர்களை வழிநடத்தலே சிறந்த ஆசிரியக் குறிக்கோள் (Aim) என்பது இன்று வெளிப்படை. குறிக்கோள் இல்லாத வாழ்வில் பயனில்லை(Aim without life is useless) "குறிக்கோள் இலாது கெட்டேன்" என்கிறார் 'அப்பர்' சுவாமிகளான திருநாவுக்கரசர்.

எந்தஒரு மாணவர்க்கும் ஏதோ ஒருதிறமையாவது நிச்சயம் இருக்கும். அதனை ஓர்ந்து, உணர்ந்து, ஆராய்ந்து அவரவர் திறமைகளைக் கொண்டு அவர்தம் எதிர்கால மானிடவியல் வாழ்வினை வளப்படுத்தத் தக்கதாக ஏற்ற அத்திவாரம் ஆரம்பப் பாடசாலையிலேயே இடப்படுகிறது என்பதை ஆசிரியர்களாகிய

நாம் மறந்துவிடல் ஆகாது. இது உங்கள் மேலான கடமை ஆகும். கடமை என்பது கடனுக்குச் செய்யும் சேவையல்ல. அதனை ஆங்கிலத்தில் "Duty" என்கிறோம். "Duty First Plesure after works." கடமை முதலில் அதன் பின்பே எங்கள் சுயநல மகிழ்வு. இதனைக் கடமையில் உள்ள ஆசிரியர்கள் உணர்ந்திடுதல் வேண்டுமன்றோ! மக்களுக்குச் செய்யும் சேவை மகேஸ்வரனுக்கும் - கடவுளுக்குச் செய்யும் சேவை. எதிர்காலச் சமுதாயத்தை உருவாக்கவுள்ள சிற்பிகளே இன்றைய மாணவர். எனவே அவர்களே எதிர்கால மக்கள். ஆகவே ஆசிரியர்கள் கடவுளுக்கே சேவை செய்கின்றனர் என்பது பெறப்படுகின்றது. இந்த உண்மையை என்றும் நீங்கள் மறக்கக் கூடாது.

இன்னும்,

"பிறந்தகம் விட்டுப் பெயர்ந்தோம் நாங்கள்
இறப்புக்குத் தான்எத் தனைபயன்கள் எம்மோர்
படிப்பும் போச்சு பசிக்கும் வயிறுகள்
உடுபுட வைகூடச் சிறப்பாக இல்லை
எடுத்த பயணங்கள் எல்லாமே ஓட்டம்
அடுத்து நடப்பது என்ன அறியோம்நாம்
சங்கமிக்கும் காதுகளில் சார்ந்து வரும்ஷெல்ஓசை
பொங்குதுயர் போகும்நாள் புத்தாண்டில் தான்வருமா?"

இன்றைய எம் தமிழர் வாழ்வில் இடப்பெயர்வால் எம்மவர்க்கு ஏற்படும் அவலங்கள் மேற்குறிப்பிட்டபடி எட்டுமறிவுக்குச் சொல்லொணாதுள்ளது. இவற்றுக்கு மத்தியிலும் ஆண்டுதோறும் போல இன்றைய 06.10.2001 ஆசிரிய தினத்தைச் சிறப்பாகக் கொண்டாடுகின்ற இந்த வித்தியாலய அதிபர், ஆசிரியர், அபிவிருத்திச் சபையோர் மேலாக மாணவச் செல்வங்கள் மற்றைய பெற்றோர் நலன்விரும்பிகள் யாவரையும் அத்தோடு இயன்றவரை எல்லாவற்றுக்கும் உதவுகின்ற கல்வித் திணைக்களத்தார் அனைவரையும் பாராட்டுவதில் நான் மனநிறைவும் மகிழ்ச்சியும் பெறுகின்றேன். இம்முயற்சி வாழ்க! மேலும் வளம்பெறுக என இச்சந்தர்ப்பத்தில் எங்கும் நிறைந்து எல்லாமாய் ஆய இறைவன் தாழ் பணிந்து வாழ்த்துகின்றேன்.

“கவிஞனாக ஒருவன் பிறக்கின்றான் கவிஞனாக எவரும் ஆகிவிட முடியாது” என்ற ஓர் அறிஞர்கூற்றை இன்று இதேதினம் யாழ் பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாவில் கௌரவ முதுமாமணிப் பட்டம் அளித்துக் கௌரவம் பெறும், யாழ் பலாலி ஆங்கில ஆசிரிய பயிற்சிக் கலாசாலையின் முன்னாள் தமிழ் விரிவுரையாளர், மாவிட்டபுரம் ஐயா சச்சிதானந்தம் அவர்கள், கச்சாயூர் செந்தமிழ்ப் புலவர் காலஞ்சென்ற திரு.சி.சின்னையினாரின் “கதிரைமலைக்கோவை” ஆகிய 1965ல் சாகித்தியப் பரிசுபெற்ற நூலின் அணிந்துரையில் மேற்கோள் காட்டியிருந்தார். இவ்வுயர் கூற்றின் சார்பில்

**“ஆசிரியனாக ஒருவன் பிறக்கின்றான்**
**ஆசிரியனாக எவரும் ஆகிவிட முடியாது”**

என்னும் என்னுடைய “கல்வி வளர் சிந்தனை” நூலில் மேலான சிந்தனைகளில் ஒன்றை உங்கள் முன் வைக்கின்றேன். இது பெண் ஆசிரியர்க்கும் ஏற்புடைத்ததே.

அன்புடையோரே! என்னுரையின் நிறைவாக,

“கல்வியெனுஞ் செல்வம் அளிக்கின்ற காவலரே!
நல்லறிவை மாணவர்க்கு நாளும் நயந்தூட்டும்
சொல்லரிய எங்கள் தொழிற்பெருமைக் கீடாக
இல்லை ஒருசேவை இவ்வுலகில் ஆகையினால்
எங்கட்கும் உண்டு உலகில் ஒருபெருமை”

என்பது என்னுடைய ஆசிரிய தினக்கவிதை.

பாட்டுக்கொரு புலவன் பாரதி,

‘அன்ன யாவினும் புண்ணியம் கோடியாம்
ஆங்கோர் ஏழைக் கெழுத் தறிவித்தல்” என்றான்.

ஓர் ஆசிரியன் தன் வாழ்வில் பல்லாயிரக் கணக்கான மாணவர்க்கு அறிவை ஊட்டுகின்றான். இது ஒரு தூயபணி, லஞ்ச ஊழலுக்கு இங்கு இடமேயில்லை. இதனாலேயே இச்சேவைக்கு இவ்வுலகில் வேறு ஒருசேவை ஈடுஇல்லை. நல்லாசிரியர் இயல்புபற்றி நன்னூலாரின் சிறப்புப் பாயிரத்தின் விதந்துரையை ஆசிரியர்கள், பலர் அறிவர். ஆசிரியராக வகுத்துக் கொண்டவர்கள் முழுமையாக அவ்வியல்புகளைப் பேணி நடப்பின் இன்றைய மாணவர் நாளைய தலைவர் ஆவர் என்பது வெள்ளிடைமலை.

வளர்க நல்லறிவு வாழ்க ஆசிரியர்

**“எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான்”**

*வாய்ப்புக்கு நன்றி. வணக்கம்.*

# வெற்றி கண்ட காகம்

1. கரிய காகம் விடாய்கொண்டு
கவலை யுடனே நீர்தேடித்
தெரிந்த இடங்கள் எல்லாமே
தேடித் திரிந்த(து) ஆசையுடன்

2. பெரிய வீட்டின் முற்றத்தில்
பின்னர் கண்டது சாடியொன்றை
அருகே சென்று அதிலேறி
ஆசை யோடு பார்த்ததுவே

3. அடியிற் கொஞ்சம் தண்ணீரை
அதனுட் கண்ட அக்காகம்
முடியும் மட்டும் எட்டியது
முடிய வில்லை நீர்குடிக்க

4. பக்கம் கிடந்த கற்களினைப்
பார்த்துக் காகம் மகிழ்வோடு
பக்குவ மாக வாய்கவ்வி
பாத்திரம் நிறையப் போட்டதுவே

5. தண்ணீர் மேலே வந்ததனைக்
கண்ட காகம் வெற்றியுடன்
உண்ணு மட்டும் உண்டுவிட்டு
உயர உயரப் பறந்ததுவே.

**"முனைந்தால் முடியும்"**

## "வலம்புரி" ஆதரவில் மூத்த பத்திரிகைச் செய்தியாளர் அமரர் சின்னத்தம்பி செல்லத்துரை அவர்களின் ஞாபகார்த்தச் "சிறுவர் பாடல்" போட்டியில்

## ஆறாவது இடம் பெற்ற கவிதை

*(சான்றிதழும் புத்தகப் பரிசும் கிடைத்தது)*

1. எம்மைப் பெற்ற ஊரைவிட்டு
ஏங்கி ஏங்கி இடம்பெயர்ந்தோம்
நாங்கள் பயந்தது சாவுக்கே!
நல்ல படிப்பும் எங்குமில்லை.

2. கல்வி இல்லை என்றிட்டால்
கதிதான் என்ன மூளைக்கு
கல்வி கற்ற ஒருவர்க்கு
தொல்லை வந்தால் துலங்குமே.

3. சூழும் பள்ளி மாணவர்நாம்
சுத்தம் காப்போம் எந்நாளும்
ஆகா ரத்தில் மட்டுமல்ல
அணியும் ஆடை உடம்பும்தான்.

4. வீரம் தேவை பெறுவதற்கு
தீரல் சோம்பல் கடனாகும்
சோம்பல் போக்க நல்லுணவு
சொல்லித் தெரிதல் அவசியமே.

5. நிலத்தில் நின்றே அப்பியாசம்
நீரில் பாய்ந்தும் விளையாட்டு
வீட்டில் கரமும் சதுரங்கம்
வெளியில் 'கிரிக்கட்' மற்றவையும்

6. வானொலி கணனி தொலைக்காட்சி
ஆனபல் ஊடக அறிவறிவோம்
மனத்தால் தெய்வம் தொழுதிடுவோம்
மதிப்போம் சொல்செயல்(காயத்தால்) உடம்பாலும்

# யாழ்ப்பாணத்தில் பெண்கள் நிலைமை

"மங்கையராகப் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திடல் வேண்டுமம்மா", என்று பாடினார் கவிஞர் "கவிமணி", தேசிக விநாயகம்பிள்ளை "பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பெனும் திண்மை உண்டாகப் பெறின்", என்பது திருக்குறள். "தாயிற் சிறந்ததொரு கோயிலும் இல்லை", அல்லவா? இவைபோல் இன்னும் பலவாறு சிறப்பிக்கப் பெற்றுப் பேசப்பெறுவது பெண்ணினம். இன்று எங்கள் யாழ்ப்பாணத்தில் பெண்கள் நிலைமை பற்றி எண்ணி ஆராய்வதே இக்கட்டுரையின் முக்கிய குறிக்கோளாகும். (Main Aim).

கல்வி உலகைப் பொறுத்தவரையில், இன்று கூடுதலாக ஆசிரியைகள், மாணவிகள் தொகையிலும் திறமையிலும் சிறந்து விளங்குகிறார்கள். கவிதை, கட்டுரை, சிறுகதை, கட்டுரைப் போட்டிகளில் மட்டுமன்றி, விளையாட்டுத்துறையில், பாடசாலை, கோட்டம், வலய, மாவட்ட ஏன்? அகில இலங்கை ரீதியிலும் யாழ் மாவட்ட மாணவிகள் முதன்மை இடங்களைப் பெற்று வருகின்றார்கள். இதையிட்டு மாணவிகளாகிய நாம் பெருமைப்படலாம். அண்மையில் வெளிவந்து 16. 03. 2002ல் யாழ் பல்கலைக் கழகப் பட்டமளிப்புப் பெறும் மருத்துவத் துறையினர் (Doctors) கூடுதலாகப் பெண் டாக்டர்களே. இதனாலும் மாணவிகள் சமுதாயம் பெருமை கொள்ளலாம். கூட்டுறவுத் துறையில் கூடப் பெண்கள் தலைமைத்துவம் பெறுகின்றனர்.

இனிப் பொதுவாகத் தாய்க்குலத்தார் தம்மை நோக்குவோம். மாணவிகள் மட்டுமன்றி பெண்ணினக் கல்வியாளர் இன்று இலக்கியத் துறையில் புத்தக வெளியீடுகள், நுண்கலைகள், கவியரங்குகள், நாடகத்துறைகள் என்பவற்றில் யாழ்ப்பாணப் பெண்ணினம் முன்னேறி வருகிறது.

இருந்தபோதும் சில காலச் சூழ்நிலைகளுக்கேற்ற மாற்றங்களினாலும், இடப்பெயர்வாலும் ஏற்பட்ட அவலங்கள், சொல்லோணாத் துயரங்கள் ஏடறியும், நாடறியும். நற்றமிழர் வாழ்வு எங்கே? என்ற ஏக்கநிலை. புலம்பெயர்ந்தோர் புலம்பல்கள்; "சீ" என்ற வாழ்க்கையில் பொதுவாகத் தமிழினம் குறிப்பாகப் பெண்ணினம் அரசின் அடக்குமுறை, ஒடுக்கு முறையால் எத்தனை மனித உயிர்கள் போயின, ஊனமுற்றோர்,காணமற்போனோர் கணக்குச் சரிவரக் கண்டுபிடிக்க முடியவில்லை.


இதனிடையே

"கற்புப் பெண்கள் அணிகலன்; காக்க வேண்டும் பெண்ணினம் கற்பைத் 'திண்மை', என்று; காட்டுகின்றார் வள்ளுவர்", என்று கச்சாயூர் பண்டிதர், கவிஞர் "சுகசீவன்" அவர்தம் சிறப்பு நூல்களுள் ஒன்றாகிய பாலர் பாமலர் நாற்பது [40] நூலில் கூடக் குறிப்பிட்டுள்ள, வள்ளுவர் காட்டிய 'கற்பெனும் திண்மை' யாழ்ப்பாணத்தில் சிதைக்கப்படுகிறது. பள்ளி மாணவிகள், கன்னியர்கள், தாய்மார்கள், பெண்குழந்தைகள் கூடக் காடையர்களாலும் காவல் காக்க வந்த படையினராலும் கெடுக்கப்படுகின்றனர். கீழ்த்தரமான இச்செய்திகள் யாழ் தினப்பத்திரிகைகள் அன்றிக் கொழும்புப் புதினப் தாள்களிலும் வெளிவருகின்றன.

மேற்படி அவலங்களில் இருந்து தாய்க்குலம் விடுபட வேண்டும். கற்றவரும் மற்றவரும் உற்ற எம் பெண்ணினத்தின் உறவோரும் இவற்றையெல்லாம் சாடிடுதல் வேண்டும். 'ஆண்' இனம், பாரதியார் காட்டிய அறிவு, நிறை, ஓர்ப்பு, கடைப்பிடி ஆகிய நால்வகைக் குணத்தையும் பேணிடல் வேண்டும். சமனாகப் 'பெண்' இனம் அவர் ஓதிய அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்பவற்றை என்றும் மறத்தல் ஆகாது.

யாழ்ப்பாணம் நற்றமிழர் வாழும் நன்னிலமாக நல்ல தமிழ் பேசும் சமூகமாக விளங்கியது என்பது வரலாறு. "யாழ்ப்பாணத்தின் தூய தமிழுக்குக் கையேந்தி நின்றது தென்னிந்தியா", என்பது "பேரறிஞர்", தென்னிந்திய திருச்சபைப் பேராயர் ஜெபநேசன் அடிகளார் கருத்து. இத்தகைய சிறப்புள்ள யாழ்ப்பாணப் பெண்களின் இன்றைய நிலைமை பற்றி இதுவரை எடுத்துக்காட்டப் பெற்றுள்ளது. இன்னும் பல வரிகளில் எழுதலாம் விரிவஞ்சி நிறைவு செய்யும் முன் மேற்படி சிக்கல்களில் இருந்து பெண்ணினம் விடுதலை பெற்று மேன்மை அடையவேண்டும். பெண்களை, "வீட்டுக்குள் பூட்டியவர் விந்தையுனோர் தலை கவிழ்ந்தார், நாட்டில் தலைகவிழா 'நாயகர்கள்' இன்னுமுளர் அனைவர்க்கும் 'சாவுமணி' அடித்திடுவோம் நாம். ஆடவரும் பெண்ணினமும் அன்புலகில் சரிநிகரே". என்பது உணர்ந்து மற்றையோர் மதிக்க வேண்டும்.

**வாழ்க பெண்ணினம், வளர்க அவர்தம் தூய்மை.**



# புதினம்

தென்னை பனைகள் சிறப்பு
சேரா சொல்லில் கூற
என்ன **புதினம்** என்றால்
இங்கே காண்க **பொருளை**

எடுத்துக் தந்தது **ஜானகி**
படிக்கும் பிள்ளை தானவள்
பெற்றோர் **"இரரசா", "இராணி"**தான்
பெரியோர் அவர்கள் வாழ்கவே!

பனையின் கிழங்கு தானிது
பார்க்கப் **புதினம்** இதுவேதான்
**'நாலு'** வேர்கள் காணுங்கள்
நன்றாய் வழமை **'ஒன்றே'**தான்

மேலும் இதனின் நிழற்படம்
மேவும் புதினத் தாள்தனில்
கச்சாய் ஊரின் வீதியில்
கண்டோம் இந்தப் **புதினத்தை**

கொச்சை ஆக்க வேண்டாம்
கொள்க நல்ல மனத்துடன்
பாட்டில் தந்தனன் **"சுகசீவன்"**
பாட்டை இயற்றும் **பண்டிதர்**

# சுகசீவ! வாழ்க!! நீர் வாழியவே!!!

கச்சாயூர் சீவ இரத்தினமே! நின்கவிகள்
எச்சம தில்லாமே யான்படித்தேன்- அச்சச்சா
தேனாய் அமிர்தாயென் சித்தங் களிகொள்ள
நானாவேன் அப்போ நயந்து.

சங்கத் தமிழ்துள்ளும் தாரணியில் நாம்பேசும்
பொங்கு தமிழ்புரளும் புத்தமுதாய்- துங்கப்
பொருட்சுவை சொற்சுவைப் போதவிழும் மேலாய்க்
கருத்தலையும் மோதிடுமே காண்.

எழுத்தசை சீர்தளை யாப்பென்ப தில்லாமே
வெழுத்துக் கவிதைகள் வீசுமிப்- போழுதில்
மரபுக் கவிதை மலருமென் வாஞ்சை
தருமன்றோ நின்கவிதை தாம்.

தெய்வீகப் பாடலொடு சின்னஞ் சிறார்கட்கும்
வையத்து வாழ்வாங்கு வாழுயிர்கள்- உய்தற்கும்
எல்லவர்க்கு மின்புற் றிருப்பதற்கும் நின்கவிகள்
நல்லமுத மென்பேனே நான்.


வாழிய கச்சாயூர் வண்புலவ! நின்பெருமை
ஆழியெனத் தாரணியில் நீயோங்கி- வாழுகவே
முத்தமிழாம் நற்றாய்க்கு முத்தாரம் சூட்டுமொரு
வித்தகனாய் வாழ்க மிளிர்ந்து.

பண்டிதர் சி.கார்த்திகேசு (சேந்தன்)
167/11, கோவில் வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம்.

## சிறப்பு நூல்கள் ஐந்தினதும் [5] வெளியீட்டு விழாவில் ஆற்றிய உரை

## பிரசவித்த தாய் பெறும் இன்பம்

"தாயிற் சிறந்தொரு கோவிலுமில்லை" இத்தகைய உச்சச் சிறப்புள்ள ஒரு தாயானவள்; பத்து மாதம் சுமந்து, படாத பாடுகளைமானிடவியல் வாழ்வு வளம் பெற என்றே அத்தகைய பாடுகளைச் சுமந்து, நோக்காடு வந்து, அது இராஜ நோக்காடு காணப்பெற்று, இயற்கைப் பிரசவம் ஆயினும் சரி, ஒப்பிரேசன் நடைபெற்று ஆயினும் மயக்க நிலையிலேயே தான் குழந்தையைப் பெற்று எடுக்கின்றாள்.



குழந்தை ஆண் மகவோ அன்றேல் பெண் மகவோ என்பதை மயக்கம் தெளிந்து பார்க்கும் தாய் எண்ணுவதில்லை. குழந்தையை முதன் முதலில் பார்க்கும் தாயின் பூரிப்பும், மனம் நிறைவும் வார்த்தைகளால் விபரிக்க முடியாதது. "ஆடவரும் பெண்ணினமும் அன்புலகில் சரிநிகரே", என்ற என்னுடைய "பாரதியின் புதுமைப் பெண்" கவிதைவரி எனக்கு ஞாபகத்துக்கு வருகின்றது. இங்கே ஒரேநேரத்தில் ஐந்து பாரிய குழந்தைகளைப் பிரசவித்திருக்கும் ஒரு சிறப்புத்தாயின் மகிழ்ச்சியையும் பெருமையையும் யான் அடைகின்றேன்.

இவ்வாறு கடந்த 30.11.2001 கார்த்திகை விளக்கீட்டு நன்நாள் வெள்ளிக்கிழமை தாம் யாத்து வெளியிட்ட சிறப்புநூல் ஐந்து [5] களினதும் வெளியீட்டுவிழாவில் பதிலுரை அளித்துச் சொற்பொழிவு ஆற்றிய தென்மராட்சி கச்சாயூர்ப் பண்டிதர்,கவிஞர் "சுக.சீவன்" அவர்கள் (ஓய்வு பெற்ற பாடசாலை அதிபர். திரு.சு.க.சீவரத்தினம்) குறிப்பிட்டார்.

சாவகச்சேரி இந்துக்கல்லூரி, அண்மையில் ஓய்வு பெற்ற அதிபர் திரு.க.சந்திரசேகரா அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில்; வாழ்த்துரையை யா/ஆனைப்பந்தி M.M. வித்தியாலய அதிபர் திரு.சோமேஸ்வரம்பிள்ளை அவர்களும், சிறப்புரையை ஓய்வு பெற்ற யா/அல்லாரை வித்தியாலய அதிபர் செல்வி. திரவியநாயகம் வேலுப்பிள்ளை அவர்களும்; பாராட்டுரைகளை, திருநாவுக்கரசு மகா வித்தியாலய அதிபர்



திரு.த.கந்தையா அவர்களும், ஓய்வுபெற்ற ஆசிரியரும், கவிஞருமாகிய "யாழோன்" திரு.ப.கனகசிங்கம் அவர்களும் ஆற்றினர். நூல்களின் ஆய்வுரைகளைச் சைவப்புலவர் வரணியூர் திரு.கா.கமலநாதன், (நிர்வாகப் பொறுப்பதிகாரி, ஆசிரியர் யா/மிருசுவில் றோ.க வித்தியாலயம்) அவர்கள் மிகவுஞ் சிறப்பாக பல்வேறு எடுத்துக்காட்டுக்களால் விளக்கினார்.

அருள்மிகு கச்சாய்க் கண்ணகை அம்மன் கோவிலில் நடைபெற்ற இப்பெருவிழாவில், சிறப்புப் பூஜையை அடுத்து ஐந்து நூல்களும் அலங்கரிக்கப்பெற்ற வெள்ளித்தாம்பாளத்தில் வீதிவலம் வரப்பெற்று, தலைவராலும் ஓய்வுபெற்ற உபதபாலதிபர் திரு. சோ. வைத்திலிங்கம் அவர்களாலும் மங்கள விளக்கு ஏற்றப் பெற்று ஷ விழா ஆரம்பமாயிற்று. ஈற்றில் பெரிய அளவு அன்னதான நிகழ்வுடன் விழா இனிது நிறைவேறியது.

-பத்திரிகைச்செய்தி-

# யாழ் கச்சாய் கனிஷ்ட உயர்தர வித்தியாலயம்
# உவகையுடன் பாராட்டுகின்றது

. எங்கள் யா/கச்சாய் கனிஷ்ட உயர்தர வித்தியாலயத்துப் பழைய மாணவனும், பழைய ஆசிரியரும் பல ஆண்டுகள் கனிஷ்ட அதிபரும் பின் அதிபராகக் குறுகிய காலமும் இருந்து ஓய்வு பெற்ற கச்சாயூரப் பண்டிதர் கவிஞர்
"சுகசீவன்" (திருசுகசீவரத்தினம்) அவர்கள்
கடந்த 30.11.2001ல்
ஒரு
மாபெருஞ் சாதனையாகத்
தமது சிறப்பு
நூல்கள் ஐந்தினை
[5] ஒரே நாளில்
வெளியிட்டு வைத்த
மைக்கு எங்கள்
கல்விச் சமூகம்
மனமுவந்து பாராட்டி
வாழ்த்து கின்றது.



இதே நேரம் அன்னாரின் வாழ்க்கைத் துணைவியார், எங்கள் வித்தியாலயப் பழைய ஆசிரியர், அவர் தற்சமயம் யா/கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயத்தில் ஆசிரியையாக - ஆசிரியசேவையில் 42வது ஆண்டில் 16.04.2002ல் அகவை அறுபதில் [60] ஓய்வு பெறுகின்றார் அன்னார்க்கும் எங்கள் மனம் மகிழ் பாராட்டுக்களைத் தெரிவிப்பதில் கல்விச் சமூகத்தார், ஆகிய நாம் மனநிறைவு பெறுகின்றோம்

12-04-2002

அதிபர்
ஆசிரியர்கள்

## யாழ் கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயம் மனமுவந்து வாழ்த்துகின்றது

எங்கள் மகா வித்தியாலயத்தில் கண்ணுங் கருத்துமாக இரு தடவைகளாகப் பல ஆண்டுகள் கல்விச் சேவையினைத் தந்து 16.04.2002ல் ஆண்டு அறுபது 60 அகவையில் மொத்தச் சேவையாக நாற்பத்தியிரண்டாவது வருடத்தில் ஓய்வு பெறும் திருமதி. சந்திரகாந்தி சீவரத்தினம் அவர்களை மனமுவந்து பாராட்டி வாழ்த்துகின்றோம். அன்னார் ஓய்வுக் காலத்திலும் தொடர் கல்விச் சேவையை ஆற்றுவார் என்பது எங்கள் முழு நம்பிக்கை. அவர்தம் வாழ்க்கையில் சகல பேறுகளையும் பெற்று, பெருவாழ்வு பெற, எங்கும் நிறைந்து எல்லாமாய இறைவன் தாழிணைபணிகின்றோம்.



இதே நேரம் எங்கள் மகா வித்தியாலத்துப் பழையமாணவனும், ஆசிரிய சேவையில் பத்து ஆண்டுகளும், அதிபராகப் பல்வேறு பாடசாலைகளில் அவரது சொந்தவூர்ப் பாடசாலையான யா/கச்சாய்க் கனிஷ்ட உயர்தர வித்தியாலயம் உட்பட இருபது ஆண்டுகளாக அதிபர் சேவையிலும் இருந்து ஓய்வு பெற்றபின், "வாழ்வே இலக்கியம் இலக்கியமே வாழ்வு" (Life is Literature, Literature is Life) என்று ஓயாது உழைத்துக் கடந்த 30.11.2001ல் ஒரு மாபெருஞ் சாதனையாகத் தமது சிறப்பு நூல்கள் ஐந்தினை 5 ஒரே நாளில் வெளியிட்டு வைத்துப் பெருமை பெற்ற அவர்தம் வாழ்க்கைத்துணைவர் கச்சாயூர்ப் பண்டிதர் கவிஞர், "சுகசீவன்" அவர்களையும் எங்கள் கல்விச் சமூகத்தார் ஆகிய நாம் மனமுவந்து பாராட்டி வாழ்த்துகின்றோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு."

12.04.2002

அதிபர், ஆசிரியர்கள்

# கல்வி வளர் சிந்தனைகள்

## தொடர் சிந்தனைகள் ......................

01. கடவுள்
02. அறம்
03. எதையும் தாங்கும் இதயம்
04. தெளிந்த நீரோடைகள் கலங்குவதில்லை
    கல்லுப் போட்டால் கலங்கும்
05. புரிந்துணர்வு
06. விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை
07. "தான் பிடித்த முயலுக்கு மூன்றுகால்"
08. ஆசை
09. பேய் / பிசாசு
10. உண்மைகள் என்றோ வெளிவரும்
    உண்மைகள் என்றும் அழியாது
    உண்மை உண்மை உண்மை
    உண்மை வாழும் உலகில்
11. ஆசிரியனாக ஒருவன் பிறக்கின்றான்
    ஆசிரியனாக எவரும் ஆகிவிடமுடியாது
12. உண்மைகள் என்றும் மறைவதில்லை
13. ஏமாற்றுப் பேர்வழிகள்
14. பாடுகளைச் சுமத்தல்

# முந்துபுகழ் கவிஞன் "சீவசுகன்" (சுகசீவன்) பற்றி மூதறிஞர் கருதுபவை:-



## I பேராயர் எஸ். ஜெபநேசன் அவர்கள்

பண்டிதர் சுக-சீவரத்தினம் அவர்கள் பல கவிதைகளையும், கட்டுரைகளையும் எழுதியுள்ளார். இதனாலே அவருடைய எழுத்துக்களில் "சரிநுட்பத்தைக்" காணுகின்றோம். [Writing Maketh An Exact Man] எதனையும் மிகவும் தெளிவாகவும், சரிநுட்பமாகவும் கூறும் ஆற்றல் பெற்றவர்.

நமது நாட்டுக்கு வேண்டிய ஆலோசனைகளும், ஆறுதல் மொழிகளும் நமது மண்ணில் இருந்தே எழவேண்டியவை. அந்த வகையில் கச்சாயூர்க் கவிஞர் "<u>சுகசீவன்</u>" அவர்களின் வார்த்தைகள் நம் நாட்டவர்க்கு ஔடதமாக (மருந்து) அமைகின்றது. அவரின் நற்பணி தொடர இறைவன், சகல சௌபாக்கியங்களையும் அருள்வாராக.

## II திரு. சிவசரவணபவன்(சிற்பி) ஐயா அவர்கள்

கச்சாயூர்ப் பண்டிதர், கவிஞர் சு.க.சீவரத்தினம் (Red Principal of School)அவர்கள் "சுகசீவன" என்னும் முத்தான புனைபெயரில் "கவிதை உலகை" ஆரோகணித்து வருகிறார். "கல்வி வளர் சிந்தனைகள்" என்ற நூலில் பல சிந்தனைகளை நான் வாசிக்க நேர்ந்த பொழுது அவரின் தத்துவஞான மேலறிவை எண்ணி வியந்தேன்.

அவரின் "அரங்கில் ஓர் ஆறு", என்ற கவிதை நூல் ஒன்றில், ஒரு கவிதை அரங்கில் <u>அறிவுரைகள்</u> என்ற தலைப்பில் பாடிய பாடலில்,

"பண்டொருநாள் பல்வளஞ்சேர் தேசம் கிரேக்கத்தில்
தத்துவ ஞானி தலையாய சோக்கிரட்டீஸ்
புத்தி புகட்டிப் புவியாரை வாழ்வித்த -
என்னை செயினும்நீ ஏன்?எதற்காய்? எப்படியென்று?
உன்னையே கேட்டுவந் தாற்றென்றான் நற்கருமம்"

ஆகிய கவிதை வரிகளை படிக்கும் பொழுது கவிஞர் "சுகசீவன்" அவர்களின் கல்வி வளர் சிந்தனைகளின் மிளிர்கருத்துக்களை ஆய்ந்து பெருமகிழ்வடைந்தேன். தத்துவஞானி சோக்கிரட்டீஸ், புத்துயிர் பெற்று எழுந்து வந்து என் அருகில் நிற்கும் பிரேமையும் எனக்கு உண்டாயிற்று.

அன்பர், கவிஞர், "சுகசீவனின்" ஆக்கங்கள் யாவுமே **மிகச் சிறப்புடைய படைப்பிலக்கியங்கள்** என்பதனை "...ித்தரமாக அடித்துக்" கூறி, அவர்தம் மேலான இலக்கியப் பல... தொடரவும், வாழ்க்கை வளம் பெறவும் வாழ்த்துகின்றேன்.